# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 09, புதன்கிழமை 22.02.2017 கதிர் 109


## இந்தியா உதவி

வறட்சியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு நூறு மெற்றிக் தொன் அரிசியையும், 8 நீர்த் தாங்கிகளையும் உதவியாக இந்தியா வழங்குகின்றது. கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலர் ஜெய்சங்கர் நேற்று முன்தினம் இலங்கை வெளி விவகார அமைச்சர் மங்கள சமர வீரவைச் சந்தித்தபோது இந்த உதவி பற்றித் தெரிவிக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்

## வவுனியாவில் வெள்ளி முதல் திரும்பவும் போராட்டம்?

வவுனியா, பெப்.22

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் வவுனியாவில் மீண்டும் தொடர்போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்குத் தயாராகி வருகின்றனர் என அறியவருகின்றது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் நேற்று வவுனியாவில் அருந்ததி விருந்தினர் விடுதியில் கூடி ஆராய்ந்து இது தொடர்பில் முடிவு ஒன்றை எடுத்திருக்கின்றன என அறியவந்தது.

காணாமலாக்கப்பட்டோரின்

பக்கம் 18 »

பத்திரிகையாளர்கள் மீதான கொடூரம்

## கீத் நொயஹரைத் தாக்கியவர்களுக்கு லஸந்த படுகொலையிலும் தொடர்பு!



### யுத்த கால மர்மங்களின் முடிச்சுகள் மெல்ல அவிழத் தொடங்குகின்றன

கொழும்பு, பெப்.22

'தி நேசன்' பத்திரிகையின் பிரதி ஆசிரியர் கீத் நொயஹரைக் கடத்திக்

பக்கம் 18 »



# மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்கள்!

## அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாம்!!

கொழும்பு, பெப்ரவரி 22

**சில காலம் முடங்கிப் போயிருந்த அரசமைப்பு வழிகாட்டல் குழு நேற்று மாலை சுமார் ஒன்றரை மணி நேரம் மீண்டும் கூடி ஆராய்ந்தது. மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்குப் பிரதான தரப்புகள் எல்லாம் இக்கூட்டத்தில் இணக்கம் தெரிவித்தன என்று அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் பிரதான ஏற்பாட்டாளர் ஜனாதிபதியின் சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன எம்.பி. இந்தக் கூட்டத்தின் பின்னர் தெரிவித்தார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில், கூட்ட அங்கத்தவர்கள் 21 பேரில் கணிசமானோர் பங்குபற்றினர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜே.வி.பியின் இரு பிரதிநிதிகள், கூட்டு எதிரணி பக்கமுள்ள பிரசன்ன ரணதுங்க, மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன், சுமந்திரன் போன்றோர் இக் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

நீண்ட, பல மாதங்களின் பின்னர் பல தரப்பும் இக்கூட்டத்தில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

பக்கம் 18 »

## புதிய தேர்தல் முறைமைக்கு கூட்டமைப்பும் எதிர்ப்பு?

கொழும்பு, பெப்.22

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்தக் கூடாது. தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்படியேதான் நடக்க வேண்டும்.

- இவ்வாறு சிறுபான்மை

பக்கம் 18 »



அளப்பு அருணாசலம்

உவையள் மலையைக் கெல்லி எலியைத்தான் பிடிக்கப் போகினம் போலை....!

## 22 ஆவது நாளாகவும் தொடரும் போராட்டம்

கேப்பாபிலவு மக்களின் காணிமீட்புப் போராட்டம் நேற்று 22 ஆவது நாளாகவும் கடும் பனிக் குளிருக்கு மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மருத்துவபீட மாணவர்கள் நேற்று அந்தப் போராட்டத்தில் பங்குபற்றினர். (உ)



கொழும்பு வந்திருக்கும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் உயர்மட்டக் குழு ஒன்று கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் சகிதம் நேற்றுப் பகல் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை கொழும்பில் சந்தித்தது. அப்போது எடுக்கப்பட்ட படம்.

## கால அவகாசத்தை நிராகரிப்போம்; சர்வதேச விசாரணையே தேவை!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வற்புறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இனிமேலும் கால அவகாசம் வழங்க முடியாது. அவ்வாறு கால அவகாசத்தை வழங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்

பக்கம் 18 »



## வடக்கு நீர்ப் பிரச்சினை தொடர்பான சிறப்பு அமர்வு ஒத்திவைக்கப்பட்டது

### மார்ச் 7 இல் இடம்பெறும் என அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையில் வடக்கு மாகாணத்தின் நீர்ப் பிரச்சினை தொடர்பான சிறப்பு அமர்வு பிற்போடப்பட்டதால் சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. அதையடுத்து அந்தச் சிறப்பு அமர்வை அடுத்தமாதம் 7 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்

பக்கம் 18 »

# இனியும் பார்வையாளராக இந்தியா இருக்காது!

## இலங்கைத் தலைவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்தார் ஜெய்சங்கர்

கொழும்பு, பெப்.22

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான அமைதித் தீர்வு முயற்சி விடயத்தில் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இந்தியா வெறும் அவதானி போல பார்த்துக் கொண்டிருந்தது. இனியும் காலம் இழுபடுமானால் இந்தியா வெறும் பார்வையாளராக இருக்க முடியாத இக் கட்டு நேரும்.

- இத்தகைய தகவல் ஒன்றை இலங்கை அரசுத் தலைவருக்குக் கொடுத்திருக்கின்றார் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர்.

மூன்று நாள் விஜயமாகக் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் நேற்று முன்தினம் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தனித் தனியாகச் சந்தித்துப் பேசினர்.

அச்சமயமே, இந்தி

பக்கம் 18 »



# பாலியல் குற்றங்களில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரது விவரம் ஐ.நாவிடம்!

## புகைப்படங்கள் அடங்கலாகச் சமர்ப்பிப்பு

கொழும்பு, பெப்.22

இலங்கையில் பெண்களை கைது செய்து, தடுத்து வைத்து பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தப்படும் ஆறு இராணுவ அதிகாரிகளின் விவரங்களை சர்வதேச மனித உரிமை அமைப்பு ஒன்று, ஐ.நாவிடம் சமர்ப்பித்துள்ளது.

இது தொடர்பான விவரங்களுடன் கூடிய ஆவணங்களுடன் இரகசியமான இணைப்பில் 6 புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று தென் ஆபிரிக்காவை தலைமையகமாகக் கொண்ட இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் இன்று பெண்களுக்கு எதிரான வேறுபாடுகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழு, இலங்கைப் பிரதிநிதிகளைச் சந்திக்கிறது.

இந்தக் குழுவிடமே இந்தத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

குற்றவாளிகளான இராணுவ அதிகாரிகளை பணியில் இருந்து நீக்குமாறு இலங்கை அரசிடம் கோருமாறும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விவரங்களை இலங்கை அரசிடம் கையளித்து, நம்பிக்கையான விசாரணையை நடத்தும்வரை அவர்கள் அனைவரையும் பணியில் இருந்து இடைநீக்கம் செய்ய வேண்டும் என்று பெண்களுக்கு எதிரான வேறுபாடுகள் தொடர்பான ஐ.நா. குழு கோரும் என்று தாம் எதிர்பார்க்கிறார் என்று இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் யஷ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

அரசு குற்றவாளிகளின் பெயர், முகவரிகளை எங்களிடம் தொடர்ந்தும் கோரி வந்தது. நாங்கள் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களின் விவரங்களை ஐ.நா. குழு ஊடாக வழங்கியுள்ளோம். நீதியை நிலைநாட்டும் கடும் தேவை அரசுக்கு இருக்கின்றதா என்பதை பார்ப்போம். ஐ.நா. குழு அதன் முன்னேற்றங்களை கண்காணிக்க முடியும் என்று சூகா மேலும் கூறியுள்ளார்.

சித்திரவதை மற்றும் பயங்கரமான பாலியல் தாக்குதல்களை வெளியிட்டுள்ள 55 பெண்கள் தொடர்பான முழுமையான விவரங்களை அமைப்பு தனது புதிய அறிக்கையில் உள்ளடக்கியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 48 பெண்களும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் கீழ் 7 பெண்களும் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என அதில் கூறப்பட்டுள்ளது என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ)

## வறட்சி பாதித்த மக்களுக்கு உதவ இந்தியா தயார்!

கொழும்பு, பெப்.22

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்தியா நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் உதவ முன்வந்துள்ளது.

இந்த நிவாரண திட்டத்துக்காக 100 மெற்றிக் தொன் அரிசியும், எட்டு குடி தண்ணீர் பௌசர்களும் வழங்கப்படும் என்று இந்திய வெளிவிவகார செயலாளர் கலாநிதி சுப்ரமணியன் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளி விவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜின் பணிப்புரைக்கு அமைய இந்த உதவி வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கு போதுமான உதவியை தொடர்ந்தும் வழங்கத் தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

## நிலமீட்புக்கு ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார் ரவிகரன்

கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு மக்களின் நிலவிடுவிப்பு போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் அந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த மக்களுடைய நியாயமான போராட்டத்துக்கு இன, மத, கட்சி பேதமின்றி அனைவரும் ஆதரவு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.



நல்லாட்சி அரசானது இன்னும் இந்த மக்களுக்கான தீர்வுகளை வழங்கவில்லை.

எனவே அன்பான எமது உறவுகளே! முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இன்று இடம்பெறவுள்ள போராட்டத்தில் ஒன்று திரண்டு குரல் எழுப்ப அனைவரும் வாருங்கள் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

(ஐ-81)

## சீனாவுக்கு செயற்கைத்தீவை வழங்க மறுக்கும் இலங்கை!

கொழும்பு, பெப்.22

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் உருவாக்கப்பட்டுள்ள செயற்கைத் தீவை சீனாவுக்கு விட்டுக்கொடுக்க முடியாது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகம் உருவாக்கப்படும்போது அதற்காக அகழப்பட்ட மண், கற்களைக் கடலில் கொட்டி ஒரு செயற்கைத் துறைமுகம் உருவாக்கப்பட்டது.

45 ஹெக்ரெயர் பரப்பளவில் உருவாக்கப்பட்ட இந்த செயற்கைத் தீவை சுற்றுலா மையமாக்கப் போவதாக இலங்கை அரசு கூறியிருந்தது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 வீத உரிமையை சீன அரசுக்கு குத்தகைக்கு வழங்க அரசு இணங்கியிருந்தது.

இருப்பினும், துறைமுகத்துக்காக உருவாக்கப்பட்ட செயற்கைத் தீவை தனதுபிடியில் வைத்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வாங்கவுள்ள சீன மேர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன், இது தொடர்பாக கடந்தவாரம், பேச்சு நடத்தியுள்ளது இலங்கை அரசு.

அத்துடன், இந்தச் செயற்கைத் தீவானது சீன அரசின் கடன்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படவில்லை எனவும், இதனைத் தனியார் மயப்படுத்தத் தேவையில்லை எனவும் துறைமுக அமைச்சர் அர்ஜுன் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

(ஐ)

## நில மீட்புப் போராட்டம் தொடர நடவடிக்கையின்மையே காரணம்

### பரவிப்பாஞ்சான் மக்கள் விசனம் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.22

எங்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எங்கள் காணிப் பிரச்சினைக்கு அரசுக்கு போதிய அழுத்தம் கொடுக்காமையே இந்தப் போராட்டங்கள் தொடர்ச்சியாக நீண்டு செல்வதற்குக் காரணம்.

-இவ்வாறு பரவிப்பாஞ்சான் மக்கள் விசனமும் கவலையும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாது உள்ள 9.5 ஏக்கர் காணிக்குச் சொந்தமான 27 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் சுழற்சி முறையில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களின் காணி மீண்டும் தங்களிடம் கையளிக்கப்படும் வரை சுழற்சி முறையில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப் போகின்றனர் என்று தெரிவித்து இரண்டாவது நாளாக நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆரம்பத்தில் நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது எங்கள் மத்தியில் வருகை தந்த அமைச்சர் விஜயகலா, மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன், அங்கஜன் ஆகியோர் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்று உறுதி மொழி வழங்கியிருந்தனர்.

ஆனால் எதுவும் நடைபெறவில்லை. எனவேதான் நாங்கள் தற்போது தீர்க்கமான முடிவை எடுத்திருக்கின்றோம்.

எங்களது காணி எங்களுக்குக் கிடைக்கும் வரைக்கும் இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தை கைவிடப்போவதில்லை.

எங்களைச் சந்திப்பதற்கு எவரேனும் அரசியல் வாதிகள் வருவதாக இருந்தால் கடந்த காலங்கள் போன்று வாக்குறுதிகளோடு வர வேண்டாம். உறுதியான தீர்மானத்துடன் வாருங்கள். அல்லது நல்லாட்சி அரசுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுங்கள். - என்று தெரிவித்தனர்.

(ஐ-70)

## ரவிராஜ் கொலை வழக்கின் தீர்ப்புக்கு எதிரான மீளாய்வு மனு விசாரணைக்கு ஏற்பு

### மேன் முறையீட்டு மனுவும் தனியாக ஆராயப்படும்

கொழும்பு, பெப்.22

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலை வழக்கின் எதிரிகள் அனைவரையும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக - மேன்முறையீட்டு மனுவுக்கு மேலதிகமாக - தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் திருமதி மடவெல மற்றும் தெல்தெனிய ஆகியோரைக் கொண்ட ஆயத்தின் முன்னால் இந்த மீளாய்வு மனு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரரான திருமதி ரவிராஜின் சார்பில் சட்டத்தரணி பாலேந்திராவின் அனுசரணையுடனும் சட்டத்தரணி நிரான் அங்கிட்டலின் உதவியுடனும் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகி வாதிட்டார்.

அவரது சமர்ப்பணத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

மனுதாரர் தரப்பு வாதம் தமக்கு முழு திருப்தியளிப்பதாகத் தெரிவித்த நீதியரசர்கள், மனுவில் கோரப்பட்டுள்ள நிவாரணங்களை மனுதாரருக்கு வழங்குவது தொடர்பில் அரசுத் தரப்புக்கு ஏதேனும் ஆட்சேபம் இருந்தால் அவற்றைத் தெரிவிக்கும் படி அரசுத் தரப்புக்கு நோட்டீஸ் பிறப்பிக்க உத்தரவிட்டனர்.

வழக்கு மார்ச் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேசமயம், ரவிராஜ் படுகொலை வழக்கின் விடுதலைத் தீர்ப்பை ஆட்சேபித்து தனியாகத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு தனியாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

அதுவும் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படுமானால் மேன்முறையீட்டு மனு மற்றும் மீளாய்வு மனுக்களை நீதிமன்றம் சில சமயங்களில் ஒன்றாகச் சேர்த்து விசாரிக்க கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

(உ)

# ஐ.நாவில் இலங்கைக்கு அவகாசம் வழங்கக் கூட்டமைப்பு அனுமதியாது

## கடுமையாக எதிர்க்கும் என்கிறார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, பெப்.22

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையில்இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கவில்லை. அதனைக்கடுமையாக எதிர்க்கின்றது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழான கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

விமானப் படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமது சொந்த நிலங்களை விடுவிக்க வலியுறுத்தி கேப்பாபிலவு மக்கள் 22 நாளாகவும் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். அந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர்ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சரும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பார் என வாக்குறுதியை வழங்கியும் தற்போது வரையில் எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில் புதுக்குடியிருப்பு மக்களும் தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். அப்போராட்டமும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

கிளிநொச்சி நகரத்தின் இதயமாகவிருக்கும் பரவிப்பாஞ்சான் மக்களும்தமதுநிலத்தை விடுவிக்க கோரி போராட்டத்தைஆரம்பித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு தாம் பூர்வீகமாக வாழ்ந்த மண்ணில் மீண்டும் சென்று வாழ்க்கையைத் தொடருவதற்கான கோரிக்கையை முன்வைத்து மக்கள் போராடிக்கொண்டிருக்கின்ற போதும்அவர்களுக்குத்தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை. அவர்கள் வீதியிலேயே உண வருந்துகின்றார்கள். உறங்குகின்றார்கள். பாரிய நெருக்கடிக்குள் இருக்கின்றார்கள்.

அவ்வாறிருக்கையில் இந்த விடயத்தில் தற்போது வரையில் அரசாங்கம் பாராமுகமாகவிருப்பது ஏன்? இந்தப் பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிடைக்கும்? சொந்த இடங்களுக்குச் செல்லும் உரிமை மக்களுக்கு இல்லையா? இதுதான் இந்த நாட்டில் சம உரிமையா?

இவ்வாறு தமிழ் மக்கள் தற்போதும்உரிமைகளுக்காக போராடிக்கொண்டும், கைதாகிக்கொண்டிருக்கும்நிலைமையில்தான் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற பிரதமர் அங்கு சட்டவிரோதமாகவுள்ள தமிழர்களை நாடு திரும்புமாறு அழைப்பு விடுக்கின்றார். இலங்கையில் தமிழர்களுக்கு பாதுகாப்பு உள்ளது எனவும் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது எனவும் கூறுகின்றார். இது முற்றுமுழுதான பொய்யாகும்.

இங்கு தமிழ் மக்கள் நடுத்தெருவில்தங்கியிருந்துபோராடுகின்றார்கள். எவ்விதமான பாதுகாப்பும் இங்கு இல்லை. பிரதமர் அனைத்து உண்மைகளையும் மறைத்து கூட்டமைப்பைச் சாட்சியாகவைத்து பொய்யுரைக்கின்றார்.

தற்போது காணமல்போனவர்களின் உறவினர்களும் தமது உறவுகளைக் கண்டறிந்து தருமாறு போராட்டம் நடத்துகின்றனர். அவர்கள் தமது சொந்தங்களை கைகளாலே இராணுவத்தினரிடத்தில் ஒப்படைத்திருக்கின்றார்கள். நேரில் கண்ட சாட்சியங்கள் உள்ளன. அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதற்கு தொடர்ந்தும் கால அவகாசத்தையே அரசாங்கம் கோரிக்கொண்டிருக்கின்றது. - என்றார். (ம)

# கிளி. கூட்டுறவுச் சங்க மோசடி தொடர்பாக வடக்கு விவசாய அமைச்சு ஏன் மௌனம்?

## சபையில் உறுப்பினர்கள் கேள்வி

(நிதர்ஷன்)

கிளிநொச்சி,பெப்.22

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற லஞ்ச, ஊழல் தொடர்பாக வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சு விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாகாண சபையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வடமாகாண சபையின் 85 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றபோது, கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற இலஞ்ச ஊழல் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், குற்றவாளியாக இனங் காணப்பட்டவருக்கு எதிராகக் கூட்டுறவு அமைச்சும், கூட்டுறவு ஆணையாளரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லைஎன்றும்உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

கூட்டுறவுத்திணைக்களத்தின் செயற்பாடுகள் தவறானவை. லஞ்சம் பெற்றிருந்த விடயம் விவசாயஅமைச்சருக்குத்தெரிந்திருந்தும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. லஞ்ச, ஊழல் விடயத்திற்கு அமைச்சர்பொறுப்புக்கூறவேண்டும். இந்தவிடயம் தொடர்பில் கூட்டுறவு அமைச்சு விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணையை சமர்ப்பிக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை.

எனவே, இவ்வாறான விடயங்களைப்பார்த்துக்கொண்டிருக்க முடியாது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ம)

# வடக்கில் பட்டதாரி ஆசிரியர் நியமனம், இடைநிறுத்தப்பட்டுள்ளது என அறிவிப்பு

வடக்கு மாகாணத்தில் பட்டதாரி ஆசிரியர் நியனம் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதுஎன வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம்வடக்கு மாகாணக்கல்விஅமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்குநேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

எதிர்வரும் மார்ச்மாதம் வழங்கப்படவுள்ளபட்டதாரிநியமனங்கள்தொடர்பாகக்கடந்த20ஆம் திகதி நடைபெற்ற பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவிலும் வடக்கு மாகாண சபையின் இன்றைய (நேற்று) அமர்விலும் ஆராயப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் நிலவும் 849 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டி பரீட்சையில் 779 பேர் சித்தியடைந்துள்ளனர். பாடரீதியாக 559 பேருக்கே நியமனம் வழங்கப்படவுள்ளது. இதனால்பரீட்சையில்சித்தியடைந்த220பேருக்கு நியமனம் வழங்கப்படாது போகும். புவியியல் போன்ற சில பாடங்களுக்கு மேலானோர் சித்தியடைந்துள்ளமையையும், சில பாடங்களுக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படாது போகும் சூழ்நிலையையும் பொதுவான சமூக விஞ்ஞான பாடத்துறையுனுள் புவியியல், வரலாறு, குடியியல், மற்றும் ஆலோசனை வழிகாட்டலில் அடங்குவதனையும், சாதாரண பட்டப்படிப்பின் முதலாவதுவருட பாடமாகஇவற்றில்ஒருபாடத்தை கொண்டவராக உள்ளோர்க்கு அந்தத் துறையில் நியமனம் வழங்கலாம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த சிலருக்கு நியமனம் வழங்கி சிலருக்கு நியமனம் வழங்காதிருப்பது பாகுபாடாக அமையலாம். இதனைக் கருத்திற் கொண்டு முழுமையான வெற்றிடங்களை நிரப்பி கூடுமானவரை சித்திபெற்றஎல்லோருக்கும் நியமனம் வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது.

மேலும் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள கல்வி அமைச்சின் அமைச்சு மட்ட ஆலோசனை குழுக்கூட்டத்தில் இதற்கான நியமனம் செய்யப்படும் வரை நியமனம் வழங்கும் நடவடிக்கையை இடைநிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. - எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-07)

# முன்னாள் தளபதி பொன்சேகாவை சிறையில் அடைத்தது தவறானதாம்

## நாமலுக்கு இப்போது வந்தது ஞானம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தமை தவறானது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, சரத் பொன்சேகா குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியிருந்த போது தாமும் தமது குடும்ப உறுப்பினர்களும் அவருக்கு நலன்வேண்டிப் போதி பூஜைகளை நடத்தினர் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் ரீதியான அடிப்படையில் சரத் பொன்சேகாவிற்குத் தண்டனை விதிக்கப்படவில்லை எனவும், சட்ட ரீதியாக விசாரணைநடத்தி அதன் அடிப்படையிலேயேசரத்பொன்சேகா தண்டிக்கப்பட்டார்எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், சரத் பொன்சேகாவிற்கு தண்டனை விதிக்கப்படாமல் இருந்திருக்க வேண்டும் என்பதேதமது தனிப்பட்ட நிலைப்பாடு எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது அரசியல் ரீதியான பழிவாங்கல்களே இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ள அவர், இந்த அரசாங்கம் பிரபாகரனைக் கொலை செய்தமைக்காகவும் வருந்துகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சந்திரிகா பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகிறார் எனவும், அவருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

# ராஜபக்ஷவின் ஆட்சி போன்றதே நல்லாட்சி எனும் இக்குள்ளாட்சி!

“கேப்பாபிலவுமக்களின்நீதியானபோராட்டங்களுக்குசெவிசாய்க்காத நல்லாட்சி எனும் குள்ளாட்சி அரசுக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய சர்வதிகார ஆட்சிக்கும் என்ன வித்தியாசம்?”

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் மன்னார் மாவட்டபொது அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர்.

இவ்விடயம்தொடர்பாகஅந்த அமைப்பின் தலைவர் வி.எஸ். சிவகரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

கடந்த இருபது நாள்களிற்கு மேலாக தமது இருப்பிய லுக்கான வாழ்வுரிமைப் போராட்டத்தை முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் மேற் கொண்டு வருவதைத் தாங்கள் அறியாமல் இல்லை.

ஜனநாயக ரீதியில் வாழ்வுரிமைக்கான அறவழிப் போராட்டத்தை ஒரு சனநாயக அரசு அங்கீகரிக்க வேண்டியதே அதன்தார்மீகபொறுப்புஆகும். ஆனால்கடந்தஅறுபதுஆண்டுகளுக்கு மேலாக சிங்கள மக்களுக்கு ஒரு நீதியும் தமிழ் மக்களுக்கு மற்றொரு நீதியுமே இலங்கையில் ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் தமிழ் மக்களின்பூர்வீகநிலங்களில் வலுக்கட்டாயமாக படைத்தரப்பை நிறுத்தியுள்ளீர்கள்.

தமிழ் மக்களை வகை தொகையின்றி படுகொலை செய்தபடைத்தரப்புஎமதுபூர்வீக நிலங்களை அபகரித்து சுக போகம் அனுபவிக்க, நாம் விரக்தியடைந்து வீதியில் நின்று போராடும் நிலையை ஏற்படுத்தி விட்டீர்கள்.

உங்கள் நல்லாட்சி எனும் குள்ளாட்சிக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சிக்கும் என்ன வித்தியாசம்?

அவர்கள் முகத்தில் குத்தினார்கள். நீங்கள்எமதுவாக்கால் அரியணை ஏறி எம்மை அடியோடு கருவறுக்க முனைகிறீர்கள். வட, கிழக்கிலேயே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில்எதற்குப்படைத்தரப்பு?

இவ்வாறுதான் கடந்த காலங்களிலும் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டதன் விளைவே ஆயுத காலச்சாரம் தோற்றம் பெற்றது.

தமிழ் மக்கள் இலங்கையர்களாக வாழ்வதில் வெறுப்பும் ஏற்பட்டது. எமக்கு அயல்நாட்டு மன நிலைமையை உருவாக்கியதும் உங்கள் செயற்பாடுகளே. ஜனநாயக கோரிக்கையை ஏற்கமறுக்கும்அரசாங்கம் எப்படி நல்லாட்சி எனும் மக்களாட்சியை தொடர முடியும்? தமிழ் மக்களின் ஜனநாயக கோரிக்கைகளைத் தொடர்ந்து அலட்சியப்படுத்தி அவமானபடுத்துவது தொடர்தேர்ச்சியாக வாடிக்கையாகி விட்டது. நீங்கள் தமிழ் அரசியல் வாதிகளை ஏமாற்றுவது போல்தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது.மக்கள் ஒரு போதும் இலக்கு மாறியவர்கள் அல்லர். தீர்வு கிடைக்கும் வரை போராடுவோம். -என்று உள்ளது.

# மட்டு. முறக்கொட்டாஞ்சேனையில் நேற்றும் மனித எச்சங்கள் மீட்பு

## உடனடியாக ஆய்வுக்கு அனுப்பப்பட்டன

மட்டக்களப்பு, பெப்.22

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனையில் இராணுவ முகாமிற்கு அருகே மனித எச்சங்கள் காணப்பட்டன எனச் சந்தேகிக்கப்பட்ட இடத்தில் நேற்று மேலும் பல மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

அங்கும்இரண்டாவதுநாளாக நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆய்வுநடவடிக்கையின்போதே அவை மீட்கப்பட்டன என ஏறாவூர் பொலிஸ்ப் பொறுப்பதிகாரி சிந்தக பீரிஸ் தெரிவித்தார்.

அத்துடன், கண்டெடுக்கப்பட்டதுருப்பிடித்த இரும்புக்கம்பிகள் மற்றும் மண்மாதிரிகள் என்பன ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினமே ஒப்படைக்கப்பட்டன. அவை பகுப்பாய்விற்காக அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன எனவும் மேற்படி பொலிஸ் பொறுப்பதிகாரி கூறினார்.

மனிதஎச்சங்கள்காணப்பட்ட மேற்படி இடத்திற்கு மேலதிக நீதிவானும் மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஷ்வி, சிரேஷ்ட வைத்திய நிபுணர் எம்.சிவசுப்பிரமணியம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் பி.சி. சுரங்க பெரேரா மற்றும் பல அதிகாரிகள் சென்றிருந்தனர். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## வாக்குறுதியும் திடசங்கற்பமும்

தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகளின் இரண்டு எம்.பிக்களிடையே - ஒரு விடயத்தில் 'பனிப்போர்' தொடங்கி இருக்கின்றது.

ஒருவர் - ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன். மற்றையவர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன்.

'அவலை இடிப்பதாக நினைத்துக் கொண்டு, உரலை இடித்த கதையாக' செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்த கருத்து ஒன்று சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

2015 ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வழங்கிய 'வாக்குறுதி' போன்ற அறிவிப்பு பொய்த்துப் போன நிலையில் -

அவரைப் பாதுகாக்கின்றோம் என்று நினைத்துக் கொண்டு செல்வம் அடைக்கலநாதன் முன்னெடுத்த பிரசாரம் கொஞ்சம் இலக்குத் தவறிவிட்டது.

தேர்தல் சமயத்தில் '2016 இறுதிக்குள் எப்படியும் தீர்வு' என்று அறிவித்திருந்தார் சம்பந்தன். பொதுத்தேர்தல் வேளையில் திரும்பத் திரும்ப அதைக் கூறியதன் மூலம் அதை ஒரு வாக்குறுதி போலவே அவர் முன்வைத்தார்.

தமிழ் மக்களின் இன்றைய ஏக தலைவர் என்ற பலத்தோடு தாம் முன்னெடுத்த நடவடிக்கைகளே, மைத்திரி - ரணில் கூட்டை அதிகார பீடத்துக்குக் கொண்டுவந்தது என்ற உரிமையுடன் 2016 முடிவுக்குள் தீர்வு காணலாம் என்று சம்பந்தன் நம்பியதில் தப்பில்லை. தென்னிலங்கை அதிகாரத் தரப்பு வழமை போல - முன்னைய தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியமை போல - சம்பந்தனையும் ஏமாற்றிவிட்டது. அதனால் எதிர்பார்த்த காலக் கெடுவுக்குள் எடுத்த காரியத்தை நகர்த்த முடியாதவராக - ஒப்பேற்ற இயலாதவராக - போய்விட்டார் சம்பந்தன்.

அதற்காக அவரைப் பல தரப்பினரும் பிய்த்து உதறத் தொடங்கி விட்டனர்.

'2016 இற்குள் எப்படியும் தீர்வு' என்று சம்பந்தன் வாக்குறுதி அளித்த போது, அவரது இலங்கைத் தமிழரசுக் கட்சியிலேயே யாரும் அவரின் கூற்றை நம்பி வழிமொழியவே இல்லை - கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சம்பந்தனின் வலதுகரம் சுமந்திரன் உட்பட எவருமே.

2016 இற்குள் தீர்வு என்ற சம்பந்தனின் வாக்குறுதி - அல்லது நம்பிக்கை - பொய்த்துப் போன நிலையில், இப்போது அதற்காக சம்பந்தன் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகும் போதும், அவர் தரப்பைப் பாதுகாக்க அல்லது அவருக்காகக் குரல் எழுப்புவதற்கு அவரது கட்சியின் தரப்பிலும் யாரும் முன்வரவில்லை.

ஆனால், அந்தப் பொறுப்பை ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இப்போது ஏற்றிருக்கின்றார் போலும். தற்போதைய நாடாளுமன்றம் பதவியேற்ற சமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒதுக்கப்பட்ட குழுக்களின் பிரதித் தலைவர் என்ற பதவியைத் தமக்கு வழங்கி, எதிர்பாராத பேருயர்வைத் தந்தமைக்கு நன்றிக்கடனாக இதனைச் செய்வதற்கு செல்வம் அடைக்கலநாதன் முன்வந்தாரோ என்னவோ...!

ஆனால், சம்பந்தனைப் பாதுகாப்பதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அவர்களின் போராட்டத்தையும் செல்வம் அடைக்கலநாதன் 'நொட்ட' முயற்சித்திருக்கின்றமைதான் சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருக்கின்றது.

"முப்படைகளையும் வைத்துக் கொண்டு முப்பது வருடங்களாக நாம் ஏதும் சாதிக்க முடியவில்லை. ஒரு வருடத்தில் தீர்வு என்று சம்பந்தன் சொன்னார் என்பதற்காக, அதனை தூக்கிப் பிடித்துக் கொண்டு அவரை வைவதா?" - என்ற சாரப்பட செல்வம் எம்.பி. பேசியிருக்கின்றார்.

அதற்குப் பதிலடி தந்த சிவசக்தி ஆனந்தன், "முப்பது வருடகால ஆயுதப் போராட்டமும் போராளிகள் மற்றும் பொதுமக்களின் தியாகமும்தான் இன்று உலகை நம்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றன. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிட்டியது தொடக்கம் மாகாணசபை வந்தது வரையும் எமது பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டு இன்று ஐ.நா. வரை எதிரொலித்துக் கொண்டு இருப்பது வரை, அனைத்துக்கும் அந்தத் தியாகங்களும், வீரப்போராட்டங்களும்தான் காரணம்" - என்று தெளிவுபடுத்தியிருக்கின்றார் சிவசக்தி ஆனந்தன்.

இதற்கு அப்பாலும் ஒரு விடயத்தை மட்டும் செல்வம் அடைக்கலநாதனுக்கு நாம் சுட்டிக்காட்டுவது காலத்தின் கட்டாயமாகின்றது.

'அடைந்தால் தமிழீழம்' - என்ற கொள்கைக் கோட்பாட்டில் இறுதிவரை நின்றே புலிகளின் தலைமை அழிந்தது. தான் எதை நம்பினாரோ - தாம் எதைப் பெற்றுத் தருவார் என வாக்குறுதியளித்தாரோ - அதற்காகப் பற்றுறுதியுடனும், மாறா நிலைப்பாட்டுடனும், திடசங்கற்பத்துடனும் போராடியவர் விடுதலைப் புலிகளின் தலைவர். அவரது இயக்கமும் அப்படியே. தாம் அளித்த வாக்குறுதிக்காகத் தம்மை - தமது குடும்பத்தை - தமது இலட்சியத்தை - தமது போராளிகளை அர்ப்பணிப்பாகத் தந்து, அந்த நம்பிக்கைக்காக உறுதியுடன் - இறுதிவரை போராடினார்.

உறுதியைத் தந்துவிட்டு, அது நிறைவேற்ற இயலாது போன பின்னரும், மக்களுக்கு அந்த வாக்குறுதியை அளித்ததால் கிட்டிய பதவியைத் தொடர்ந்து கட்டிப் பிடித்து வைத்துக் கொண்டு பிரபாகரனும் புலிகளும் இருக்கவில்லை என்பதை மட்டும் சம்பந்தனின் குரல் போல இப்போது ஒலிக்க முற்படும் செல்வம் அடைக்கலநாதனுக்கு மக்கள் சார்பில் நாம் கூறத்தான் வேண்டும்.




## பிரிந்தவர்களை ஒன்றிணைத்து 'முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பு'

### புதிய கட்சியை உருவாக்கத் தயாராகிறார் சேகுதாவுத்

கொழும்பு, பெப்.22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து தனிக் கட்சிகளை உருவாக்கியவர்களை எல்லாம் ஒன்றுசேர்த்து, கூட்டமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார் மு.காவின் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவுத் தெரிவித்தார்.

மு.காவின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் அவர் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சகலரும் இணைந்து 'முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பு' என்ற பெயரில் கூட்டமைப்பை உருவாக்கி, அதனூடாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆரம்பத்தில் கொள்கை, கோட்பாடு, இலட்சியம் மற்றும் இலக்கு இருந்தது. அவற்றில் பிரதானமானது, முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான கருவியாகச் செயற்படுவதாகும்.

மு.காவின் 2015ஆம் ஆண்டினுடைய யாப்புத்திருத்தத்துடன், கிழக்கு மாகாணத்துக்கென்று இருந்த உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன. இது வெறுமனே வெற்று அரசியல் நடத்தும் நிஸ் அமைப்பாக மாறியிருக்கின்றது.

ரவூப் ஹக்கீம் என்ற இன்றைய தலைமையில் இருக்கின்ற இந்தக்கட்சி 'முஸ்லிம் காங்கிரஸ்' என்ற தொரு பெயர்ப் பலகையை மாத்திரம் சுமந்ததொரு கட்சி. அதன் கொள்கைகள், இலட்சியங்கள் இல்லாதொழிக்கப்பட்டு விட்டன.

எனவே, எல்லோரையும் இணைத்துப் பொதுவானதோர் அணிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் இருக்கின்றேன். அந்த முயற்சி, கோட்பாட்டு ரீதியாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இப்படியொரு வேலைத்திட்டம் அவசியம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட இரு பிரதான கட்சிகளும் சில தேசியக் கட்சிகளும் கோட்பாட்டளவில் ஏற்றுக் கொண்டுள்ளன. இது தொடர்பான விரிவான பேச்சுகள் தொடர்ந்து வரும் காலப்பகுதியில் இடம் பெறும். எல்லோரும் மு.காவில் இருந்தவர்கள் என்பதனால் 'முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பு' என்ற பெயரில்தான் இதை ஆரம்பிக்க வேண்டும்என்பது எனது கருத்து. எனினும்,எல்லாக்கட்சிகளுடனும் உடன் பாட்டுக்கு வந்த பின்னர் பெயர் சம்பந்தமாகப் பின்னர் பேசி முடிவெடுக்கப்படும்.- என்றார். (எ)

## இலங்கைக்கு வழங்கப்படும் நிதியை இடைநிறுத்துங்கள்!

### புலம்பெயர் அமைப்புகள் ட்ரம்பிடம் கோரிக்கை

கொழும்பு, பெப்.22

அமெரிக்காவால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற மில்லேனியம் சவால்களுக்கான நிதியை இடைநிறுத்துமாறு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

'ட்ரம்புக்கான தமிழர்கள்' என்ற புலம்பெயர் அமைப்பால் இந்தக் கோரிக்கை முன்வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்படவில்லை. இலங்கையில் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் இது வரை தீர்க்கப்படவில்லை.

எனவே, இவ்வாறான நிலையில் இந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஒபாமா நிர்வாகத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியின் ஊடாக வருடாந்தம் இலங்கைக்கு 900 மில்லியன் டொலர்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## வறட்சி நிலை தொடர்ந்தால் நீர்மின் உற்பத்தி நிறுத்தம்!

### மின்சக்தி அமைச்சர் சியம்பலாபிட்டிய கூறுகிறார்

கொழும்பு, பெப்.22

வறட்சியான காலநிலை தொடருமானால் நீர் மின் உற்பத்தி பெரிய சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மழை கிடைக்காது போகுமானால், ஏப்ரல் 21-22 வரையான காலப் பகுதிகளில் நீர் மின் உற்பத்தியை நிறுத்த வேண்டி ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை கேகாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

எதுஎவ்வாறு இருப்பினும், இதனால் நீர் மின் உற்பத்தியை நிறுத்த வேண்டி ஏற்பட்டால், மக்களுக்குத் தொடர்ந்தும் மின் விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்காக பெருமளவு செலவிட வேண்டும், எனவே, மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

### நாளை

23.02.2017
வியாழக்கிழமை
நட்சத்திரம் : உத்தரம் பி.இ 6.27 வரை
திதி : துவாதசி மு.இ 9.06 வரை
சுபநேரம் : 8.00 – 9.30 வரை
இராகுகாலம் : 2.00 – 3.00 வரை

# அரிசி நெருக்கடியை வைத்து நல்லாட்சியைக் குழப்ப முயற்சி

## விசனம் தெரிவிக்கிறார் வர்த்தக அமைச்சர் ரிசாத்

கொழும்பு, பெப்.22

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி நெருக்கடியைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றும் கீழ்த்தரமான மனோபாவத்தை கைவிடுமாறு வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அரிசி நெருக்கடியைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

வறட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாடு தொடர்பாகவும், அரிசி நெருக்கடியை அரசு சமாளிக்கும் திட்டம் குறித்தும் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ரிசாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் அரிசித் தட்டுப்பாடு நிலவுகின்றது என ஊடகங்கள் மூலம் ஒரு குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகிறது. சில இடங்களில் அரிசி அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது என்றும் குறிப்பிடுகின்றனர்.

அரிசி விவகாரத்தில் சூழ்ச்சி செய்ய வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். சூழ்ச்சி என்பது அரிசி ஆலை உரிமையாளர்களை மட்டுமல்ல, சில வர்த்தகர்களையும் பாதித்துள்ளது. 300 ஆலைகளை வழங்கி அரசுக்கு உதவி செய்வோம் என ஆலை உரிமையாளர்களும் அரசிடம் விண்ணப்பித்திருந்தனர். அதனால் ஒவ்வொருவர் மீதும் குற்றம் சுமத்த முடியாது.



நாட்டில் சில வர்த்தகர்கள் இருக்கின்றனர். இந்த நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி தங்களுக்கு இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பவர்களும் இருக்கின்றனர். இதில் அரசு தலையிட்டு கட்டுப்பாட்டுவிலையை வர்த்தமானியில் வெளியிட்டதால் இன்று மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிசி சந்தைக்கு விடப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசுக்கு எதிராக வாக்களித்த சிலர் அரிசி நெருக்கடியை பயன்படுத்தியாவது அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சிக்கின்றனர். யாராவது அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்களாக இருந்தால் அதுகுறித்து 1977 என்ற அவசர இலக்கத்திற்கு தகவல் அளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார். (ஐ)

## சிவராத்திரி நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களின் மகா சிவராத்திரி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

அன்றைய தினம் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் விசேட கலை நிகழ்வுகளும் ஆலய முன்னாள் தலைவர் அமரர் கலக் விசுவநாதன் பற்றிய சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

சனிக்கிழமை சுவாமி எழுந்தருளி ஆலய பித்தர் கேணியில் தீர்த்தம் இடம்பெறும். (இ)

★ ★ ★

புங்குடுதீவு பத்தாம் வட்டாரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகா சிவராத்திரி பெருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விசேட நான்கு சாமப் பூசைகளுடன் இடம்பெறவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை அதிகாலை விசேட பூசைகள் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார். (ச)

★ ★ ★

மகா சிவராத்திரியை முன்னிட்டு வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விசேட பூசைகளும் விசேட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் மறுநாள் காலை 5.30 மணி வரையில் விசேட பூசைகள் நடைபெறவுள்ளன.

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.22

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக கொழும்பு லேடி றிஜ்வே மருத்துவமனை வைத்தியரும் பழைய மாணவியுமான திருமதி ஸ்ரீதேவி அசோகன், மாலபே தனியார் வரையறுக்கப்பட்ட சர்வதேச பொறியியல் சேவை நிறுவனப் பணிப்பாளர் மு.ந. அசோகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## விமானப் படையின் சைக்கிள் பேரணி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு

கொழும்பு, பெப்.22

இலங்கை விமானப் படையின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரங்களை இலக்கு வைத்து சைக்கிள் பேரணிகள் நடத்தப்படவுள்ளன.

அத்துடன் விமானப் படைக்குச் சொந்தமான ஆளில்லா தாக்குதல் விமானம் மற்றும் போர் விமானங்களும் மக்களது பார்வைக்காக வைக்கப்படவுள்ளன.

விமானப் படையின் 66 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை விமானப்படை ஏற்பாடு செய்துவருகின்றது.

இதன் ஒன்றாகவே சைக்கிள் பேரணி நடத்தப்படவுள்ளது.

இது குறித்துத் தெளிவு படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் உள்ள விமானப் படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் கருத்து வெளியிட்ட எயார் வைஸ் மார்ஷல் கொட்டகதெனிய, மார்ச் 3 ஆம் திகதி காலை கொழும்பிலுள்ள விமானப் படைத் தலைமையகத்துக்கு முன்பாக இந்த நிகழ்வு ஆரம்பமாகும்.

முதலாவது நாளில் மொத்தம் 128 கிலோ மீற்றர் தூரம்வரை சென்று புத்தளம் நகரில் முடிவடையவுள்ளது. அடுத்தநாள் புத்தளம் பாலாவி மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகி 138 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று வவுனியா நகரத்தில் முடிவடையவுள்ளது. மூன்றாம் நாள் வவுனியா இராணுவ முகாம் முன்பாக ஆரம்பமாகவுள்ள பயணம் 148 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று யாழ். மாநகர சபை மைதானத்தில் முடிவடையவுள்ளது.- என்றார்.

மார்ச் இரண்டாம் திகதி இலங்கை விமானப் படையின் 66 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விமான சாகச விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளன என்று எயார் வைஸ் மார்ஷல் எஸ்.கே பத்திரன தெரிவித்தார். (ஐ)

மணமக்கள் விபரம்

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 4711 \| கோ<br>1980 \| மானிப்பாய் \| 165 cm<br>Telecom \| இலங்கை<br>ரேவதி (மீனம்) \| கி.பா: 49 \| சூரி செ: 7 | 3839 \| வே<br>1989 \| யாழ்நகர் \| 161 cm<br>Bank Officer \| இலங்கை<br>அவிட்டம் (கும்பம்) \| கி.பா: 73 |
| 5252 \| வே<br>1970 \| யாழ்நகர் \| 167 cm<br>Teacher \| இலங்கை<br>மகம் (சிம்மம்) \| கி.பா:44 \| செ: 7 | 5779 \| ப<br>1983 \| மீசாலை \| 158 cm<br>Teacher \| இலங்கை<br>ரேவதி (மீனம்) \| கி.பா: 31 |
| 3808 \| வே<br>1977 \| கொக்குவில் \| 170 cm<br>Managing Director \| இலங்கை<br>ரோகிணி (ரிஷபம்) \| கி.பா: 13 \| செ: 4 | 3355 \| வே<br>1986 \| திருநெல்வேலி \| 155 cm<br>Project Manager \| இலங்கை<br>கார்த்திகை (ரிஷபம்) \| கி.பா: 56 \| செ: 12 |
| 7068 \| வே<br>1984 \| சாவகச்சேரி \| 188 cm<br>Online Project Writer \| இலங்கை<br>திருவாதிரை (மிதுனம்) \| கி.பா: 19 | 5159 \| வே<br>1973 \| நெல்லியடி \| 150 cm<br>A/L \| இலங்கை<br>பரணி (மேடம்) \| கி.பா: 42 \| செ: 1 |
| 5875 \| வே<br>1978 \| கிளிநொச்சி \| 168 cm<br>Librarian \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 15 | 3256 \| வே<br>1987 \| மூளாய் \| 164cm<br>Development Officer \| இலங்கை<br>அஸ்வினி (மேடம்) \| கி.பா: 37 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

## இன்றைய மின்தடை அறிவிப்பு

இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் மட்டும் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5 மணி வரை மின் தடை ஏற்படும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

அதன்படி **யாழ்.பிரதேசத்தில்**- விக்னேஸ்வரா வீதி, ஊறணி, வீரவாணி, காளி கோவிலடி, வதிரி, இரும்புமதவடி, சக்களாவத்தை ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்**- நெளுங்குளத்திலிருந்து பறையனாலங்குளம் வரை, பறையனாலங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து காங்கன்குளம் வரை, புளிதறித்த புளியங்குளத் திலிருந்து செக்கட்டிப் புலவுவரை, பிரமனாலங்குளத்திலிருந்து பெரிய தம்பனை வரை, மறக்கறம் பளையிலிருந்து மணிபுரம் வரை, தாண்டிக் குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, வவுனியா புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து புளியங்குளம் வரை,

திருநாவற்குளம், சாந்தசோலை, அக்கோபுர, கொக்கெலிய, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வேளாங்குளம் விமானப் படை முகாம், ஓமந்தை தொழில்நுட்பக் கல்லூரி, ஓமந்தை யூனியன் அலியன்ஸ் லிமிட்டெட், வரன் அரிசி ஆலை, நொதேண் பாம், மறக்கறம்பளை பயிற்சிக்கூடம், கொக்கெலிய இராணுவ முகாம், மீன்பிடி வலைத் தொழிற்சாலை, ஓமந்தை ஏ.எம்.பி சிலோன் ceylon PVT (LTD) ஆகிய இடங்களிலும்-

**மன்னார் பிரதேசத்தில்**- பறையனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, பெரிய பண்டிவிரிச்சானில் இருந்து மடுவரை தட்சணாமருதமடுவில் இருந்து பள்ளமடுவரை, விடத்தல்தீவிலிருந்து வெள்ளாங்குளம் வரை, வாங்காலைக் கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம்.

மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிடிபம் ஹவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற் சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத் துறைமுகம், சன்னார் இராணுவ முகாம், கஜேசபுரம் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# தற்காலிகமாக கிடைக்கும் சலுகைகள் உரிமைகளுக்கான நிரந்தரத் தீர்வாகா!

## ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு.பெப்.22

நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப் பட்டுள்ளார்கள். பாதுகாப்புத் தரப்பினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் சில விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனாலும், எந்தச் செயற்பாடும் முழுமையாக இடம்பெற வில்லை. இவை அனைத்தும்தற்காலிகமானவையே. அவ்வாறு கிடைக்கும் சலுகைகள் எமது உரிமைகளுக்கான நிரந்தரத் தீர்வாகா.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாண்டவன்வெளி ஜோசப் வாஸ் வித்தியாலயத்தின்வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கால இழுத்தடிப்புச் செய்யாமல் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். பாதுகாப்புத் தரப்பால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய கருத்துக்களை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அரசு முன்வைக்க வேண்டும். நல்லாட்சி அரசு கால அவகாசத்தை மட்டும் கேட்டுக்கொண்டு, பல பிரச்சினைகளைத் தீர்க்காது வைத்திருக்கிறது. இவ்வாறான செயற்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கை யீனத்தை ஏற்படுத்துவன ஆகும். சர்வதேச விசாரணை தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்.



மத்திய அரசால் குவிக்கப்பட்ட அதிகாரங்கள் மாகாண மட்டங்களுக்கு பகிரப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மக்கள் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஆட்சி முறைமையையே, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நிலைப்பாடு உள்ளது. நாங்கள் ஒன்றுபட்டு செயற்படும்போது, எமது மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்க முடியும்.-என்றார். (ச)

# அதிகார பறிப்புக்கு எதிராக கிழக்கு அவையில் பிரேரணை

## முதலமைச்சர் முன்வைத்தார் நேற்று

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைப் பறித்து, நகர அபிவிருத்தி அதிகார சபைகளுக்கு சுற்று நிருபத்தின் மூலம் கடந்த முதலாம் திகதி வழங்கிய சட்டத்துக்கு எதிராகப் பிரேரணை ஒன்று கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கப்பட்டது.

மாகாண சபை அமர்வு, அவைத்தலைவர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை கூடியது. இதன் போது, கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் மற்றும் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெப்பை ஆகியோர் இது தொடர்பான அவசரப் பிரேரணையை சபையில் முன்வைத்தனர்.

மாகாண சபைகளிடமும், உள்ளூராட்சி சபைகளிடமிருந்தும் மத்திய அரசாங்கத்தால் பறித்தெடுக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் வழங்க வேண்டும் எனக் கோரியே இந்தப் பிரேரணையை அவர்கள் முன்வைத்தனர்.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் 16 பேரும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 4 பேரும் வாக்களித்தனர். மேலும், இந்தச் சட்டம் தொடர்பானதமது எதிர்ப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அனுப்பி வைப்பதற்கும் இந்த அமர்வில் முடிவு எடுக்கப்பட்டது. (ச)

# 'முன்பள்ளி ஆசிரியர்களை அரசு அங்கீகரிக்க வேண்டும்!'

மட்டக்களப்பு, பெப்.22


முன்பள்ளி ஆசிரியர்களை மத்திய அரசு உள்ளீர்க்க வில்லை. அவர்களை அரசு அங்கீகரிக்க வேண்டும் என கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

கல்விப் புலத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒரு துறையாக முன்பள்ளி உள்ளது. மற்றைய ஆசிரியர்களுக்கு வழங்கும் சலுகைகள் சம்பளம் ஆகியன முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அவர்களுக்கான சீரமைந்த பாடத்திட்டத்தைவகுக்க வேண்டியது கல்வி அமைச்சின் பொறுப்பாகும். முன்பள்ளிகளைப் பொறுத்தவரையில் முன்னர் அரச சார்பற்ற நிறுவனங்கள் பொறுப்பு எடுத்திருந்தன. அதனால் அவர்களின் தேவைகளை ஓரளவுக்குப் பூர்த்தி செய்வதற்கு அளவான ஊதியம் கிடைத்தது. ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்கள் அந்தப் பொறுப்பைக் கைவிட்டுவிட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

# 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்பு

## மட்டு. நகரில் காந்தி பூங்காவுக்கு முன்னால்







வேலையற்ற பட்டதாரிகளுக்குநியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் வலியுறுத்தி, ஐந்தம்சக் கோரிக்கைளை முன்வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்றபட்டதாரிகள் மட்டு நகரில் உள்ள காந்தி பூங்காவுக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றைமுன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் சுமார் 1500 இற்கு மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

### ஐந்தம்சக் கோரிக்கைகள்

★போட்டிப் பரீட்சையின்றி, நேர்முகப் பரீட்சையின்மூலம்நியமனங்களை பட்டதாரிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★பட்டதாரிகளுக்கான நியமனங்கள் அவர்கள் பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். இதற்கான வயது எல்லையை 45 ஆக அதிகரிக்க வேண்டும்.

★பட்டதாரி நியமனங்களுக்கு விண்ணப்பம் கோரப்படும் போது, ஏற்கனவே அரச சேவையில் இருப்பவர்கள் விண்ணப்பிக்காத வகையில் சுற்று நிருபம் அமைய வேண்டும்.

★கோட்டா முறையில் நியமனங்களைவழங்கும் செயற்பாட்டை தடை செய்ய வேண்டும்.

★விண்ணப்பம் கோரப்படும் போது, மாற்றுத் திறனாளிகள் விசேட கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளையே இவர்கள் முன்வைத்தனர்.

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படும்வரையில் இந்தப் போராட்டம் காலவரையறையின்றி தொடரும் என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ரி.கிசாந் தெரிவித்தார்.(ச)

# மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளரை இடம் மாற்ற வலியுறுத்திப் போராட்டம்

*600 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்து*





மூதூர்,பெப்.22

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடம் மாற்ற வலியுறுத்தி 600 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்து போராட்டம் ஒன்றை நேற்றுச் செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் மீது மூன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஏற்கெனவே மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

வலயக் கல்விப் பணிப்பாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபர், ஆசிரியர்களை தகாத வார்த்தைகளால் பேசுதல், ஆசிரியர்களைத் தொழுகைக் கடமையைச்செய்ய விடாது தடுத்தல், கற்கக்கூடிய மாணவர்களுக்கே கற்பியுங்கள் என்று அசிரத்தையாக உத்தரவிடல் போன்ற மூன்று பிரதான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப் பட்டது.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அதிகாரியை உடனடியாக இடமாற்றம் செய்வதாக கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் வாக்குறுதி அளித்திருந்த போதும், இன்றுவரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப் படவில்லை என கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். ஜெயராஜா தெரிவித்தார். (ச)

# கவனவீர்ப்பு போராட்டம்

கல்முனை கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கானசம்பளநிலுவை வழங்கப்படாமையைக்கண்டித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று கல்முனை வலயக் கல்வி அலுவலகத்துக்கு முன்பாக பிற்பகல் 3 மணிக்கு கவன வீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது என அச்சங்கத்தின் தலைவர் ஏ.எம். அஹவர் தெரிவித்தார்.

மேற்படி வலயத்தில் கடமையாற்றும் சுமார் ஆயிரத்து 200 ஆசிரியர்களுக்கு இன்னும் சம்பள நிலுவை வழங்கப்பட வில்லைஎனஅவர்மேலும் தெரிவித்தார். (ச)

# விபத்தில் இளைஞன் படுகாயம்



மட்டக்களப்பு,பெப்.22

மட்டக்களப்பு பழுகாமம் தும்பங்கேணி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கனரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், இளைஞன் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

பழுகாமத்தைச் சேர்ந்த அரசரெத்தினம் விஜிதரன் (வயது -24) என்பவரே படுகாயம் அடைந்தவர் ஆவார்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த பிரஸ்தாப இளைஞன்கனரகவாகனத்தின் கீழ் அகப்பட்டு, பலத்த பிரயத்தனத்தின் பின்னரே மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# 13 ஆவது திருத்தச்சட்டம் போதுமானது இல்லை; 30 வருடகால யுத்தத்துக்கு இதுவே காரணம்!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு,பெப்.22

13 ஆவது திருத்தச்சட்டம் போதுமானது இல்லை என்பதாலேயே கடந்த 30 வருடங்களாக யுத்தம் தொடர்ந்தது என்று முன்னாள் ஜனாதிபதியும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையின் அனைத்துச் சமயத் தலைவர்களின் தேசிய மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த வருடத்துக்குள் அரசமைப்பு மாற்றம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும்.

புதிய அரசமைப்பாக இருக்கலாம் அல்லது அரசமைப்புத் திருத்தமாக இருக்கலாம் எதுவாக இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் இது அமையவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சிங்களத் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

எனவே, தமது உரிமைகள் அரசமைப்பின் ஊடாகவே உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் 13 ஆவது திருத்தம் போதாதா எனக் கேட்கின்றனர். 13 ஆவது திருத்தச் சட்டம் போதுமானது இல்லை என்பதாலேயே கடந்த 30 வருடங்களாக யுத்தம் தொடர்ந்தது.

இவ்வாறான நிலையில் தற்பொழுது 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தினால் போதாதா எனக் கேட்கின்றமை வேடிக்கையாக உள்ளது.

சிறந்ததொரு அரசியல் தீர்வை நான் முன்வைக்க



நடவடிக்கையெடுத்த போது பிரபாகரன் அதனை விரும்பவில்லை. எனது யோசனைத் திட்டத்துக்கு 7 வாக்குகளே குறைவாகக் கிடைத்தன.

இந்த தீர்வுத் திட்டம் தொடர்பில் ஏழு மாதங்களில் 33 பேச்சுக்களை நடத்தியிருந்தேன். அன்று இதனை எதிர்த்தவர்கள் இன்று அரசாங்கத்தில் எம்முடன் இருக்கின்றனர்.

அதேநேரம், யுத்தத்தில் காணாமற் போன தமது உறவுகளுக்கு என்ன நடந்துள்ளது என்பதை தெளிவாகக் கூறாவிட்டால் அவர்களுடைய உறவினர்கள் தொடர்ந்தும் கண்ணீர் வடித்தவாறு தேடிக்கொண்டேயிருப்பர்.

எனவேதான் காணாமற் போனவர்களுக்கான அலுவலகத்தை அமைத்து அதில் காணாமற் போனவர்கள் என்ன ஆனார்கள் என்பதை அறிக்கையாகத் தயாரித்து வெளியிடும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகமொன்றை அமைப்பதற்கு நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை விரைவில் அமைத்து காணாமற் போனவர்களின் உறவுகளுக்கு தெளிவான நிலைப்பாடொன்று அறிவிக்கப்பட வேண்டும்.

எனினும், இந்த அலுவலகம் தொடர்பில் சில இராணுவத்தினர் சந்தேகத்தை விதைத்துள்ளனர். இந்த அலுவலகத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தொடர்புபட்ட இராணுவத்தினரை யுத்த குற்ற நீதிமன்றத்துக்கு இழுக்கப் போவதாகக் கூறப்படுகிறது.

அப்படியான எந்தவொரு தேவையும் எமக்கு இல்லை. இப்படிச் செய்யுமாறு எந்தவொரு சர்வதேசமும் கூறவில்லை.

சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு சிறந்த ஒரு பொற்காலம் தற்பொழுது ஏற்பட்டுள்ளது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (க)

# நுரைச்சோலை அனல் மின் நிலையம் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றதா?

## விசேட ஆய்வு ஆரம்பம்



கொழும்பு,பெப்.22

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தினால் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கண்டறிவதற்கான விசேட ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையம் உரிய தரநிர்ணயங்களுடன் அமைக்கப்படாத பட்சத்தில், அதனைச் சீர்செய்வதற்குத் தேவையான வழிமுறைகள் என்னவென்பது குறித்தும் இந்த ஆய்வில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்றும் ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம் தமித குமாரசிங்க குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மொறட்டுவை, ஸ்ரீ ஜயவர்தனபுர, ருஹுணு மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் துறைசார் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அடங்கிய குழுவினால் இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்னும் சில தினங்களில் ஆய்வுகள் நிறைவடையும். அத்துடன், உரிய தர நிர்ணயங்களின் அடிப்படையில் மின் உற்பத்தி நிலையம் அமையப்பெறாத பட்சத்தில் அதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாடு முழுவதும் மழை அதிகரிக்கும்!

கொழும்பு,பெப்.22

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் நாடு முழு வதும் மழை அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மழை மற்றும் இடியுடன் கூடிய மழைக் காலநிலை பொத்துவில் ஊடாக மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை வரையில் கடற்கரையை அண்டிய பல பிரதேசங்களில் நிலவும்.

விசேடமாக நாட்டின் தென் பகுதியில் மழை அதிகமாக காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. காற்று, மழை மற்றும் இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதால் மக்களை அவதானமாக இருக்குமாறும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ் தெரிந்திருப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்!

## அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்துகிறார்

கொழும்பு,பெப்.22

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ் தெரிந்திருப்பது அவசியம் என்று சட்ட விதிகள் வகுக்க வேண்டும் என அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் பெரும் பாலானோர் ஒரு மொழியை மட்டுமே அறிந்தவர்களாக உள்ளனர்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளும் தெரிந்திருந்தால் மட்டுமே



இலங்கையில் காணப்படும் அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் உணர முடியும்.

குறிப்பாக, இலங்கைத் தமிழர்களுக்கு உள்ள பிரச்சினைகளை சிங்கள மொழியை மட்டுமே அறிந்த எம்.பி.க்களால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது.

எனவே, அனைத்து எம்.பிக்களும் தமிழ் மொழியை கற்றறிவதைக் கட்டாயமாக்க வேண்டும்.

இது தொடர்பான சட்ட விதிகளை வகுப்பது அவசியம். அரச கரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்த இலங்கை அரசு தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

இலங்கை மக்களின் பிரச்சினைகள் சிங்களவர் விவகாரம் என்றும், தமிழர் விவகாரம் என்றும் காலங்காலமாக வேறுபடுத்தியே கூறப்படுகிறது.

இத்தகைய வேறுபாடுகள் நிலவும் வரை நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

சமூக நல்லிணக்கத்துக்காக இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதேவேளை, நாட்டின் வடக்கு மற்றும் தெற்கு பிராந்தியங்களில் உள்ள சில தீவிரவாத அமைப்புகள் மக்களிடையே தவறான கருத்துகளைப் பரப்பி வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# அமெரிக்க அதிகாரிகள் பட்டாளம் இலங்கை வருகை!

கொழும்பு,பெப்.22

அமெரிக்க அரசாங்கத்தின் விசேட பிரதிநிதிகள் சிலர் நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரவு 11.30 மணியளவில் அமெரிக்காவின் விசேட விமானம் ஒன்றின் மூலம் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

16 பேரைக் கொண்ட இந்த பிரதிநிதிகள் குழுவுக்கு பீட்டர் ரொஸ்கென் என்பவர் தலைமை தாங்குகிறார் .

இந்த பிரதிநிதிகள் குழுவினர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள். இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் விசேட ஒப்பந்தங்கள் சிலவற்றுக்கு கைச்சாத்திடுவதற்காகவே இவர்கள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# 16 கிலோ 'என்சி' போதைப்பொருளுடன் பொகவந்தலாவையில் ஒருவர் கைது!



கண்டி, பெப்.22

கண்டி பகுதியிலிருந்து பொக வந்தலாவவுக்கு பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்ட புகை யிலை தூள் அடைக்கப்பட்ட 16 கிலோ 'என்சி' பைக்கற்று களுடன் ஒருவர் பொகவந்த லாவைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை பொகவந்த லாவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படை யில் அந்த நபர் கைது செய்யப் பட்டார் என்று தெரிவிக்கப்படு கின்றது.

விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட போது கைப்பற் றப்பட்ட 'என்சி' பைக்கற்று களில் ஒரு பைக்கற்றில் 400 கிராம் வீதம் 40 பைக்கற்றுகள் இவ்வாறு பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக பாடசாலை மாண வர்களை இலக்காக வைத்து இந்த 'என்சி' வகையான போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவர் ஹற்றன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன என்றும் பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# மீன்பிடி படகுகளில் பயணிகள் ஏற்றிச்செல்வது பெரும் குற்றம்

## அவ்வாறான படகுகளின் அனுமதிப்பத்திரத்தை ரத்துச்செய்யுமாறும் அமைச்சர் உத்தரவு



கொழும்பு, பெப்.22

கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் ஆலோசனை களைப் புறக்கணித்து பயணி களை ஏற்றிச்செல்லும் மீன் பிடிப் படகுகளுக்கான அனும திப் பத்திரத்தை ரத்துச் செய் யுமாறு கடற்றொழில் அமைச் சர் மஹிந்த அமரவீர உத்தரவு பிறப்பித்துள்ளார். மீன்பிடி அனு மதி வழங்கப்பட்ட படகுகளில் மக்களை ஏற்றிச் செல்வது பெரிய குற்றம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

கட்டுக்குருந்த கடலில் விபத்துக்கு உள்ளான மீன் பிடிப்படகு எந்த வகையிலும் பயணிகள்போக்குவரத்துக்குப் பொருத்தமானதல்ல. இதில் ஐந்து பேர் மாத்திரமே பய ணிக்க முடியும்.

அந்த விபத்து நடைபெற்ற சம்பவத்தில் 30 பேர் பயணித் துள்ளனர். மேலும் அந்தப் படகில் இருந்த எந்தவொரு பயணியும் பாதுகாப்பு அங்கி அணிந்திருக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

விபத்துக்கு உள்ளான பட கின் கடற்றொழில் அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்யுமாறு கடற்றொழில் பணிப்பாளர்நாய கத்துக்கு அமைச்சர் ஆலோ சனை வழங்கியுள்ளார்.

மேலும், இந்த விபத்து தொடர்பில் விரைவில் விசா ரணைகளை மேற்கொள்ள வேண்டும். நீரியல் வள அமைச்சின் வழிகாட்டுதல் களைக் கவனத்தில் கொள்ளாத வர்களுக்கு எதிராக வருங்காலங் களில் கடுமையான நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, மீன்பிடி அனு மதி வழங்கப்பட்ட படகுகளில் மக்களை ஏற்றிச்செல்வது பெரிய குற்றம் என்றும் மஹிந்த அமர வீர சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

## தினசரி ராசி பலன் 22.02.2017

துர்முகிவருடம் 2017 ஆம் ஆண்டு மாசித்திங்கள் 10 ஆம் நாள் ஏகாதசி இரவு 8.20 வரை. பின்துவாதசி. பூராடம் பி.இ 5.11 வரை. பின் உத்தராடம். அமிர்த சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 12.24 முதல் 1.52 மணி வரை. சுபநேரம்: மாலை 4.56 மணி முதல் 6.27 வரை. இன்று ஏகாதசி விரதம். இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: மாசிமாத தேய்பிறை ஏகாதசி.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** கீர்த்தியான நாள். தொட்டது துலங்கும். மாணவர்களின் சிறந்த மதிப்பெண்களால் ஆசி ரியர்களின் பாராட்டு கிடைக்கும்.

**ரிஷபம்:** கவலையான நாள். உத்தியோகத்தர்கள் சிலருக்கு வேலையை இழக்க நேரும். எதிலும் பொறுமை, அவதானம் தேவை.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. உத் தியோகத்தர் சிலருக்குத் தேவையில்லாத இடமாற்றம் ஏற்பட்டு குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்ல நேரும்.

**கடகம்:** சுபீட்சமான நாள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் அனுசரணையால் விரும்பிய உயர்வுகள் கிடைக்கும்.

**சிம்மம்:** அதிஷ்டமான நாள். தொழில் விஷயமாய் சிலர் வெளிநாடு செல்ல ஆயத்தமாவார்கள். வெளி நாட்டு உறவினர்களிடமிருந்து சிலருக்கு விலை யுயர்ந்த பரிசுப்பொருள்கள் வந்துசேரும்.

**கன்னி:** யோசனை நிறைந்த நாள். எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். செய்யும் தொழி லில் முன்னேற்றம் குறையும்.

**துலாம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பயணங்களில் கவனம் தேவை. குடும்பத்தில் குழப்பமான நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். உத்தியோகத் தர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு வலியக் கிடைக்கும்.

**தனுசு:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். இவர்கள் புகழ், அந்தஸ்து, வசதிவாய்ப்புகள் அதி கரிக்கும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சியான தகவல்கள் வந்துசேரும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும்.

**கும்பம்:** யோகமான நாள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடைபெறும். வீடு, வாகனம் போன்ற அசையாச் சொத்துகளை வாங்கும் யோகம் உண் டாகும்.

**மீனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாகவே இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். திட் டமிட்ட பயணம் தாமதமாகும்.

சந்திராட்டமநாள்: கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆகிய நட்சத்திரகாரர் இந் நாளில் நற்கருமங்களைத் தவிர்த்தல் வேண்டும்.



இலவச சுகாதார சேவை மற்றும் இலவசக் கல்வியைப் பாதுகாக்கக் கோரியும் சைட்டம் தனியார் வைத்தியக் கல்லூரியை அரசுடைமையாக்கக் கோரியும் ஊவா மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் சேவையாற்றும் வைத்தியர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# திருத்தப்பட்ட ரயில் நேர புதிய அட்டவணை வெளியீடு

கொழும்பு, பெப்.22

ரயில் சேவைகள் திணைக் களத்தால் திருத்தம் செய்யப் பட்ட புதிய ரயில் நேர அட்ட வணை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கேட்போர் கூடத் தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே இந்த அறிவிப்பு வெளியிடப் பட்டது.

2006 ஆம் ஆண்டில் இருந்து 11 வருடங்களுக்குப் பின்னர் மாற்றப்பட்ட நேரத்துக்கு அமைய இந்த ரயில் நேர அட்டவணை தயாரிக்கப் பட்டுள்ளது.

வருடத்துக்கு வருடம் ரயில் பயணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டமையைத் தொடர்ந்து புதிய ரயில்கள் சேவை யில் ஈடுபடுகின்றமையால் நேர அட்டவணையில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அச்சிடப்பட்ட நேர அட்ட வணை ரயில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ள அதிகாரிகள், ரயில் சார திகள், காவலர்களிடம் வழங்கு வதற்கு ரயில் திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

எதிர்வரும் மாதத்தில் இருந்து இந்த புதிய நேர அட்டவ ணையை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் பிரதான ரயில் நிலையங்களுக்கு வழங் குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

புதிய ரயில் நேர அட்ட வணையைப் ரயில் சேவை கள் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணையத்தளமான http://www.railway.gov.lk/ என்ற முகவரியில் பார்வையிட முடியும். (எ)

# முகத்தை முழுதாக மூடும் தலைக்கவச தடை நீடிப்பு

கொழும்பு, பெப்.22

மோட்டார் சைக்கிள் ஓட்டு நர்கள் முழுமையாக முகத்தை மூடும் தலைக்கவசத்தை அணி வதற்கு எதிரான தடைக்கு விதிக்கப்பட்டிருக்கும் இடைக் காலத் தடை உத்தரவு தொடர்ந் தும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதி மன் றம் நேற்றுமுன்தினம் இதற் கான உத்தரவைப் பிறப் பித் துள்ளது.

இந்த விவகாரம் தொடர் பான மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது. இதன் போது மேன் முறையீட்டு நீதி மன்ற நீதியரசர் விஜித் மலல் கொட மற்றும் எஸ்.துரைராஜா ஆகிய நீதியர சர்கள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேலும், இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை ஒத்தி வைக் கப்பட்டுள்ளது. (எ)

# இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் புலம்பெயர் இலங்கையர் அதிகரிப்பு

கொழும்பு, பெப்.22

இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பிக்கும் புலம் பெயர் இலங்கையர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளதாக அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஒரு மாதத்துக்கு 2 ஆயிரம் பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங் கக்கூடிய சாத்தியங்கள் உள்ள னவா என்று ஆராய்ந்து பார்ப்ப தாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் இலங்கையர் கள் ஆயிரத்து 743 பேருக்கு நேற்றுமுன்தினம் இரட்டை குடியுரிமைச் சான்றிதழ் வழங் கப்பட்டுள்ளது என்றார்.

இந்தநிலையில், தற்போது வரையில் நல்லாட்சி அரசால் 20 ஆயிரம் பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள் ளது என்றும் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார். (எ)

## சாரணிய இயக்கத்தின் தந்தை

# பேடன் பவல்

**உலகுக்கு சாரணியத்தை வழங்கிய சாரணிய தந்தை பேடன்பவல் பிரபுவின் 160 ஆவது பிறந்ததினம் இன்றாகும்.**

இ.தில்லைவாசன்,
ஆயர்வேத மருத்துவர்;,ஜனாதிபதி சாரணன்,
உதவி மாவட்ட சாரண ஆணையாளர்

உலக வாழ்க்கைக்கு வேண்டிய சகல வாழ்வியல் கலைகளையும் தன்னகத்தே கொண்ட சாரணிய இயக்கத்தை தந்தை பேடன் பவல் பிரபு உலகுக்கு வழங்கினார். சிறுபராயத்தில் இருந்தே பயின்று நல்வாழ்வு வாழ வழி அமைத்தார் அவர்.

''என்னால் கூடுமான வரையில் எனது சமயம், தேசம் ஆகியவற்றுக்கு எனது கடமைகளைச் செய்யவும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரியவும் சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்.'' என சாரணர்கள் தங்கள் கௌரவத்தின் மீதே வாக்குறுதி அளிக்கும் மிக உன்னதமான சாரணர் வாக்குறுதியை தந்தவர் தந்தை பேடன் பவல்.

லண்டன் மாநகரில் 1857-02-22 ஆம் திகதி தாயார் கென்றீற்ரா கிறேசிக்கும் தந்தையார் சர்வகலாசாலை பேராசிரியர் றொபேட் கிறேஸ் பேடன் பவலுக்கும் 7 ஆவது குழந்தையாகப் பிறந்தார் பேடன் பவல்.

தாய் தந்தையர் சூட்டிய நாமம் றொபேட் ஸ்ரீவின்சன். மூன்று வயதாக இருக்கும் போது தந்தையார் இறந்துவிட்டார். தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தார். கஷ்டஜீவன வாழ்க்கை வாழவேண்டி வந்த போதிலும் பிள்ளைகள் மீது தாயாரும் தாயார் மீது பிள்ளைகளும் கொண்டிருந்த பேரன்பால் அந்தக் கஷ்டங்கள் பறந்தன.

இவர் சாட்டர் கவுஸ் பாடசாலையில் கல்வி கற்றார். பாடசாலைக்கு அருகில் உள்ள குறுங்காட்டில் மிருகங்களைப் பின் தொடர்ந்து சென்று அவற்றின் வாழ்க்கை முறைகளை அவதானித்து வந்தார். இங்கிலாந்தில் பல்வேறு பகுதிகளுக்கும் தமது நான்கு சகோதரர்கள் உடனும் பிரயாணங்கள் செய்து வெட்ட வெளிகளில் பாசறை வாசம் செய்து வெகு இன்பமாக வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

13 வயதில் உபகார சம்பளம் பெற்று படித்தார். 19 வயதில் பட்டம் பெற்று இராணுவத்தில் சேர்ந்தார். 26 வயதில் தனது குதிரைப் படையுடன் கிரிமின் யுத்தத்தில் பெரும் புகழ் பெற்று தளபதியாக உயர்வு பெற்றார். சாரணிய தந்தையின் சுவடு தொடரும் திறமையையும் ஆண்மையையும் கண்டு சுதேசிகள் ''இம்பீசா'' என்று அழைத்தனர். இதன் பொருள் ''ஒருபோதும் துயில் கொள்ளாத ஓநாய்'' என்பதாகும். 42 வயதில் உபதளகர்த்தர் பதவிக்கு உயர்வு பெற்றார். தென்னாபிரிக்காவிலுள்ள ''மேப்பிங்'' நகரைஒரு குதிரைப் படையுடன் 1899 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி முதல் 1900 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரை பாதுகாத்து வைத்திருந்தார். அதனால் மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்வு பெற்றார். 44 வயதில் தென்னாபிரிக்காவில் இருந்து பெருவீரனாகதாய் நாடு திரும்பினார். இந்தியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில்தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு செயற்படத் தொடங்கினார். பெரும் தொகையான சிறுவர் நூல்களை எல்லாம் படித்தார். ''சாரணியத்துக்கான துணை'' என்னும் நூலை வடிவமைத்தார். இப்புத்தகம் சிறுவர் பாடசாலைகளில் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. சாரணியக் கொள்கையை சிறிது சிறிதாக பேடன்பவல் அபிவிருத்தி செய்தார். இவ் அபிவிருத்தி பலன் அளிக்குமா என்பதைப் பரிசோதிக்க 1907 ஆம் ஆண்டு முதன் முதலாக உலகம் கண்ட சாரணியச் சிறுவர் பாசறை வாசத்தை இங்கிலாந்து கால்வாயில் அமைந்துள்ள ''பிரவுன்ஸ் தீவிலே'' இருபது சாரணியச் சிறார்களுடன் நடத்தினார்.

இந்தப் பாசறை வாசம் பெரும் வெற்றியை சாரணிய தந்தைக்கு அளித்தது.

1908 ஆம் ஆண்டு இளைஞர் சாரணியம் என்னும் நூலை 6 பிரசுரங்களாக வெளியிட்டார். நூலுக்கான சித்திரங்களை தந்தையே தீட்டினார்.

உலகத்திலுள்ள சிறுவர்களுடைய ஓர் இயக்கமாக சாரணியம் வளரத் தொடங்கியது. பிரபு வருங்கால யுத்தங் களுக்கு சிலரைப் பழக்கி விடுவதிலும் பார்க்க வருங்கால சந்ததியினரை உத்தமர்களாக்குவதற்கு சாரணிய பயிற்சியே சிறந்தது என உணர்ந்தார். இராணுவத்தில் வகித்த அதிஉயர் பதவியை விட்டு விலகினார்.

தனது 52 ஆவது வயதில் இருந்து இரண்டாவது வாழ்க்கையை சாரணிய வாழ்க்கையாக வாழ்ந்தார். உலக சிறுவர்களின் அன்பையும் மரியாதையையும் பெற்றார்.

1910 இல் பெண்கள் சாரணியத்தை ஆரம்பித்தார். முதலாவது பெண் சாரணர் ஆக பேடன்பவல் பிரபுவின் சகோதரி செல்வி அக்னஸ் இணைந்து கொண்டார். இந்த ஆண்டிலேயே கடற் சாரணர் பிரிவையும் ஆரம்பித்தார்.

1912 ஆம் ஆண்டு சாரணியத்தை உலக சகோதரத்துவ இயக்கமாக்குவதற்காக உலக பிரயாணத்தை மேற்கொண்டார். அப்பொழுது முதலாவது உலக யுத்தம் வந்து முயற்சி தடைப்பட்டது. 55 வயதில் ஒலெவ் சென் கிளயர் சோம்ஸ் என்பவரைத் திருமணம் செய்தார். பீற்றர், கீதர், பெற்றி என்ற மூன்று குழந்தைகள் இவர்களுக்குப் பிறந்தனர்.

சாரணிய தந்தையின் துணைவியாரின் பிறந்த தினமும் இன்றாகும். சாரணிய தந்தையின் 55 ஆவது வயதில் இலங்கையில் மாத்தளை புனித கிறிஸ்துவக் கல்லூரியில் எவ்.ஜி. ஸ்ரீபனால் சாரணிய ஒளி உதயமாகியது.

1916 ஆம் ஆண்டு சாரணிய தந்தையின் 59 ஆவது வயதில் ''யாழ் மண்ணில்'' ஐந்து கல்லூரிகளின் சாரணிய ஒளி பரவியது. இன்று நூறாவது ஆண்டையும் தாண்டி மிக பிரகாசமாக ஒளி பரப்பிக் கொண்டிருக்கின்றது. சென்ற ஆண்டு யாழ். மாவட்ட சாரணர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 9 ஆவது தேசிய ஜம்போறி யாழ். மாவட்டத்திலே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும் கோட்டையைச் சுற்றியுள்ள இடங்களிலும் சர்வதேசத்து சாரணர்களும் ஒன்றுகூடி பாசறை வாசம் அமைத்து 9 ஆவது தேசிய ஜம்போறி நடைபெற்றது. ஒருநாள் யாழ். மாவட்ட சாரணர்களின் நூற்றாண்டு விழாவாகப் பிரகடனப்படுத்தி மிகச் சிறப்பாக காலை முதல் இரவு வரை பல போட்டி நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் யாழ். மாவட்ட சாரணர்களால் நடத்தப்பட்டமை சாரணியத் தந்தையின் வழியில் யாழ். மாவட்ட சாரணர்களின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் சாரணிய வரலாற்றுப் பதிவாகும். இவ்வாறாக ஐந்து கல்லூரி சாரணர்களும் சாரணிய நூற்றாண்டை மிகமிக சிறப்பாகக் கொண்டாடி சாரணிய வரலாற்றில் புதுப்புது பதிவுகளைச் சாதித்துள்ளார்கள். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாரணர்களின் இறுதிநாள் நிகழ்வில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவும் வருகை தந்தார். குருளைச் சாரணர்கள் கரம்பிடித்து அழைத்து வர குருளைச் சாரணர்களின் ''கம்பீர கோஷமும்'' சாரணர்களின் வரவேற்பு மரியாதையும் வழங்கப்பட்டதும், சாரணிய நூற் றாண்டு மலரின் முதல் மலர் ஜனா திபதிக்கு வழங்கப்பட்டதும் சாரணிய தந்தையின் உருவச்சிலை நூற்றாண்டு நினைவாக கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பெற்றுள்ளமையும் சாரணிய வரலாற்று பதிவாகும். யா/பரியோவான் கல்லூரி சாரணிய நூற்றாண்டில் ஆயிரத்துக்கு மேல் மாணவர்கள் சாரணீயத்தில் இணைந்து கொண்டமையும், சாரண ஆசிரியர்கள் 40 பேர் கல்லூரி அதிபர் உட்பட சாரணர் தலைவர்களுக்குரிய கலைக்கூறு IV உயர்தர தலைவர்கள் பயிற்சி நெறிக்கு சென்றமையும் சாரணிய வரலாற்று பதிவாகும்.



> ''என்னால் கூடுமான வரையில் எனது சமயம், தேசம் ஆகியவற்றுக்கு எனது கடமைகளைச் செய்யவும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரியவும் சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்.''

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணிய நூற்றாண்டுவிழாவில் வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளத்தின் அருகில் அடர்ந்த காட்டுக்குள் ''நூற்றாண்டு ஜம்போறியை'' பல கல்லூரி ஆண், பெண் சாரணர்களையும் ஒன்று கூட்டி சாரணிய தந்தையின் வெட்ட வெளி பாசறை வாசத்தை மிகமிகச் சிறப்பாக நடத்தி சாரணிய வரலாற்றில் பதிவை பதிந்துள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி சாரணர்களின் நூற்றாண்டுச் சாரணர்களின் நடைப்பிரயாணத்தை மையமாகக் கொண்டு சாரணர்கள் பங்கு கொண்டு நடித்த ''தடைதகர்க்கும் திரைப்படம்'' வெளியிட்டமை புதியதோர் சாரணிய வரலாற்றுப் பதிவாகும். யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி சாரணர்கள் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி சாரணிய வரலாற்றுப் பதிவை பதித்துள்ளனர். நூற்றாண்டு விழா கண்ட ஐந்து கல்லூரிகளிலும் சாரணர்களாக இருந்து தற்போது உலகெங்கும் பரந்து வியாபித்துள்ள சாரணர்கள் நூற்றாண்டு விழாவுக்கும் தத்தம் கல்லூரிகளுக்கு வந்து கல்லூரி சாரணர்களுடன் இணைந்து பயிற்சிகள் வழங்கியும் ஆலோசனைகள் கூறியும் சாரணிய நூற்றாண்டு விழாவைச் சிறப்புற வைத்து ஒருநாள் சாரணன், வாழ்நாள் சாரணர் என்ற சாரணத் தந்தையின் குறிக்கோளுக்கு அமைய செயற்பட்டமை சாரணியத்துக்குப் பெருமையை சேர்த்துள்ளது.

இந்த ஆண்டில் ஆறரை வயது தொடக்கம் 11 வயதினருக்கான 'குருளைச் சாரணர் பிரிவை' ஆரம்பித்தார். 61 ஆவது வயதில் 18 வயது தொடக்கம் 24 வயதினருக்கான திரி சாரணர் பிரிவை ஆரம்பித்தார். இவ்வாண்டில் இலங்கையில் கடற் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் உலகம் யுத்தம் முடிவுக்கு வந்த பின்பு 63 ஆவது வயதில் சர்வதேசத்துச் சாரணர்களையும் லண்டனில் ஒன்று சேர்த்து 'முதலாவது உலக சாரணர் மேலனத்தை' நடத்தினார். இறுதி நாள் ஒகஸ்ட் 6 ஆம் திகதி பேடன் பவல் 'உலக பிரதம சாரணர்' என்று பிரகடனம் செய்யப்பட்டார். 68 வயதில் 'வலது குறைந்தோருக்கான சாரணியத்தை ஆரம்பித்தார். 1929 இல் உலகெங்கும் 20 லட்சம் சாரணர்கள் இருந்தமையைக் கண்டு 'ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர்' ''கில்வெல் பேடன் பவல் பிரபு'' என்று பட்டம்சூட்டி கௌரவித்தார். 1932 இல் இளைஞர் சாரணியம் என்னும் நூலை வெளியிட்டார்.

1921, 1934 ஆண்டுகளில் இலங்கைக்கு சாரணியத் தந்தையும் துணைவியாரும் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்தனர். அவ்வேளை யாழ்ப்பாண மண்ணிலே சாரணிம் சிறப்பாக அதிவேக வளர்ச்சியுற்று இயங்கி வருவதைக் கேள்வியுற்று யாழ்ப்பாணம் வந்து மேன்மேலும் வளர்ச்சியுறுவதற்கான ஆலோசனைகள் வழங்கியமை 'உலக சாரணிய வரலாற்றுப் பதிவாகும்.''

தந்தை தனது 80 ஆவது வயதில் ஆபிரிக்காவில் கென்னியா பிரதேசத்திலே மிகவும் இயற்கை அழகு வாய்ந்த மலை அடிவார நைஜீரி கிராமத்தில் துணைவியாருடன் மகிழ்வாக வாழ்ந்து வந்தார்.

1941.01.08 ஆம் திகதி 84 ஆவது வயதுக்கு 44 நாள்கள் இருக்கையில் இறைவனடி சேர்ந்தார்.

1907 ஆம் ஆண்டு 20 சாரணர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சாரணியம், இன்றுவரை பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளமைக்கு சாரணியத் தந்தையின் சாரணிய வாக்குறுதியும் பத்து விதிகளுமேயாகும்.

சிங்கிரி பிரிவில் இணைந்து தொடர்ந்து வாழ்நாள் வரை சாரணிய பாடத்திட்டத்துக்கமைய பயின்று பயிற்சிகளைப் பெற்று உலக வாழ்க்கையில நல்வாழ்வு வாழ வைப்பதே சாரணியத் தந்தையின் நோக்கமாகும்.

'உலகெங்கும் வளர்க சாரணியம் நல்வாழ்வு வாழ்கரும் மக்கள்'' ★

காலைக்கதிர்







வொன்.வேணு கிருஷ்ணா

**இரண்டு கட்சிகளுமே அமெரிக்க பெருநிறுவனங்களின் இலாபங்களைப் பாதுகாப்பதற்காக புதிய இராணுவ இரத்த ஆற்றுக்கு தயாரிப்பு செய்து வருகின்றன**

இந்நிலைமை மரணகதியிலான அபாயங்களை முன்னிறுத்துகிறது. பிரதானமாக ஜனநாயகக் கட்சி மூலமாக செயல்பட்டு வரும் உளவுத்துறை முகமைகள், அதிகரித்து வரும் சமூக மற்றும் பொருளாதார மனக் குமுறல் களுக்கான எரிப்பிழம்புகளாக, வெளி எதிரிகள் என்று கூறப்படுவதைப் பயன்படுத்தி, பெரும் எதிர்ப்பை ட்ரம்பை நோக்கி கொண்டு செல்லவும் மற்றும் நேரடியாக ரஷ்யாவிற்கு எதிராகவோ அல்லது சீனாவிற்கு எதிராகவோ திருப்பி விடப்பட்ட அவர்களது போர் திட்டங்களுக்குப் பின்னால் திசைதிருப்பவும் முயன்று வருகின்றன.

தொழிலாளர்களும் இளைஞர்களும் ஆளும் உயரடுக்கின் எந்தவொரு கன்னைக்குப் பின்னாலும் அணி வகுக்கக்கூடாது. இரண்டு கட்சிகளுமே அமெரிக்க பெருநிறுவனங்களின் இலா பங்களைப் பாதுகாப்பதற்காக புதிய இராணுவ இரத்தஆற்றுக்கு தயாரிப்பு செய்து வருகின்றன. அவை, தந்திரோ பாயங்கள் மற்றும் இலக்குகளை வரிசைப்படுத்துவதன் மீது சண்டையிட்டு கொள்கின்றனவே தவிர, ஏகாதிபத்திய போர்களில் கொல்வதற்கோ அல்லது கொல்லப்படுவதற்கோ அமெரிக்க இளைஞர்களை அனுப்புவதா வேண்டாமா என்பதில் அவற்றிற்கிடையே எந்த சண்டையும் இல்லை.

### அமெரிக்கா- இந்தியா- சீனா பாதுகாப்பு விவகாரம்


Ministry of External Affairs
Government of India


Home | About Us | Visits | Media Center / Documents | Overseas Indian Affairs | E Citizen/Te

Media Center / Documents

Inaugural India-US Maritime Security Dialogue

The inaugural India - US Maritime Security Dialogue was held on 14 May 2016 in New Delhi.

தெற்கு ஆசியா முழுவதும், நேபால் மற்றும் வங்காளத்திலிருந்து இலங்கை வரையிலும், மொரிஷியஸ் மற்றும் மாலைதீவுகள் ஆகிய இந்தியப் பெருங்கடல் தீவுகளின் அரசுகளுக்கு மத்தியிலும் சீனாவுடன் உரசலுடனான மூலேயில் புது டில்லி ஏற்கனவே மூழ்கி உள்ளது.


U.S. Embassy & Consulates in India

Remarks by Adm. Harry Harris, Commander, U.S. Pacific Command

இந்தியாவும் அமெரிக்காவும், இந்திய பெருங்கடல் பகுதியில் சீன நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் கப்பல் நடமாட்டம் குறித்த உளவுத் தகவல்களை பரிமாறி வருகின்றன என்று அமெரிக்க பசிபிக் கட்டுப்பாட்டு மையத்தின் தலைவரான அட்மிரல் ஹாரி ஹாரிஸ், 2017 ஜனவரி மூன்றாம் வாரம் புது டில்லியில் நடைபெற்ற ஒரு செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடனான ஒரு பாதுகாப்பு மாநாட்டினை தொடர்ந்து ஓர் உரையில், ஹாரிஸ் ''இந்திய பெருங்கடல் பகுதியில் சீன கடற்படை இயக்கம் தொடர்பான தகவல்கள் இந்தியாவுடன் பரிமாறப் பட்டு வருகின்றன'' என்று கூறினார்.

அட்மிரல் தொடர்ந்து பேசும்போது, பெண்டகன் ''இந்தியாவுடன் நெருக்கமாகவும் மேலும் இந்த வகையான கண்காணிப்பு நடவடிக்கையினை இந்தியா மேற்கொள்வதற்கு ஏற்றவாறு அதன் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பணியாற்றுகிறது'' என்றார்.


அட்மிரல் ஹாரிஸ், மார்ச் 2016ல் நடைபெற்ற Raisana மாநாடு தொடக்க விழாவின்போது, தென் சீனக்கடல் பகுதி உட்பட இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடல் பகுதிகளில் இந்திய மற்றும் அமெரிக்க போர் கப்பல்கள் கூட்டாக ரோந்து சுற்றி கண்காணிக்கவிருக்கும் அந்த நாளை அவர் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். அந்த மாநாட்டில், அவர் ''இந்திய-ஆசிய-பசிபிக்'' பிராந்தியத்தை ஒரு ''புதிய இயல்பான'' பகுதியாக ''வடிவமைக்க'' இந்தியாவும் அமெரிக்காவும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும், ஏனெனில் ''ஒரு பழியுணர்வுமிக்க ரஷ்யா மற்றும் அதிகரித் தளவில் ஒரு வலுப்பெற்றுள்ள சீனா போன்ற நாடுகள் மூலமாக'' இந்த பகுதி வடிவமைக்கப்பட்டு வருவதை தடுக்கவேண்டும் என்று கூறினார்.

இந்த தசாப்தத்தில், சீனாவின் ''எழுச்சியை'' தேவைப்பட்டால் போரின் மூலமாக தடைசெய்வற்கான அமெரிக்காவின் முயற்சியில் இந்தியாவை ஒரு முன்னணி அரசாக உரு மாற்றுவதற்கான உந்துதலில் இந்த கொள்கை சீனாவிற்கு ஒரு மூலோபாய எதிர்பலமாக இந்தியாவை கட்டமைக்கும் நோக்கம் கொண்டுள்ளதுடன் திண்மைப்படுத்தப் பட்டும் வருகிறது.

**சீனாவுக்கு எதிரான வொஷிங்டனின் இராஜதந்திர மற்றும் இராணுவ மூலோபாய கடும் நடவடிக்கைகளுடன் இன்னும் நெருக்கமாக இந்தியா தன்னை இணைத்துக் கொண்டுள்ளது**

அமெரிக்க பசிபிக் கட்டுப்பாட்டு மையத்தின் தலைவர் பின்னர், ஒரு வருடாந்திர இந்திய அமெரிக்க கடற்படை பயிற்சியான மலபார் பயிற்சி பற்றி குறிப்பிட்டார், அதில் சமீபத்தில் அதில் ஒரு நிரந்தர மூன்றாவது பங்காளராக ஜப்பானையும் உட்படுத்தும் வகையில் அது விரிவுபடுத்தப்பட்டது. ''இந்திய பெருங்கடல் பகுதியில் சீனா என்ன செய்துகொண்டிருக்கிறது என்று கண்காணிப்பதற்கு ஏற்றவகையில் எங்கள் திறனை மேம்படுத்துகின்ற சாணைக்கல் போன்று மலபார் பயிற்சி எங்களுக்கு உதவுகிறது. சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் தெளிவாக ஒரு பிரச்சினையாக இருக்கிறது, மேலும் இந்த பிராந்தியம் ஊடாக அவை செயல்பட்டு வருகின்றன என்பதை நாங்கள் அறிகிறோம்.'' என்றும் தெரிவித்தார்.


U.S. Navy's Pacific Fleet commander Admiral Harry Harris, left, speaks to journalists during his visit to U.S.S. Spruance (DDG 111), Arleigh Burke-class guided-missile destroyer, docking in Sembawang wharves in Singapore on Jan. 22, 2014 Roslan Rahman - AFP/Getty Images.


United States Navy
Biography

Admiral Harry B. Harris, Jr.
COMMANDER, U.S. PACIFIC COMMAND

Admiral Harris was born in Japan and reared in Tennessee and Florida. Following graduation from the U.S. Naval Academy in 1978 and designation as a naval flight officer, he was assigned to Patrol Squadron (VP) 44. His subsequent operational tours include tactical action officer aboard USS Saratoga (CV 60); operations officer in Patrol Squadron (VP) 4 at Barbers Point, Hawaii; three tours with Patrol and Reconnaissance Wing 1 at Kami Seya, Japan; director of operations for U.S. 5th Fleet at Manama, Bahrain; and director of operations for U.S. Southern Command.

Harris commanded Patrol Squadron (VP) 46, Patrol and Reconnaissance Wing 1, Joint Task Force-Guantanamo, the U.S. 6th Fleet, Striking and Support Forces NATO, and the U.S. Pacific Fleet. Harris has served in every geographic combatant command region, and participated in the following major operations: S.S. Achille Lauro terrorist hijacking incident, Attain Document III (Libya, 1986), Earnest Will (Kuwaiti reflagged tanker ops, 1987-88), Desert Shield/Desert Storm, Southern Watch, Enduring Freedom, Iraqi Freedom, Willing Spirit (Colombia hostage rescue, 2006-7) and Odyssey Dawn (Libya, 2011). For Odyssey Dawn, he served as the Joint Force Maritime Component Commander afloat.

Harris' graduate education focused on East Asia security. He attended Harvard's Kennedy School of Government, Georgetown's School of Foreign Service, and Oxford University. He was a MIT Seminar 21 fellow.

Harris' staff assignments include aide to commander, U.S. Naval Forces Japan; chief speechwriter for the Chairman of the Joint Chiefs of Staff (CJCS); and three tours on the Navy Staff, including as an action officer in the Strategic Concepts Branch, director for the current operations and anti-terrorism/force protection division, and deputy chief of naval operations (CNO) for Communication Networks (OPNAV N6).


U.S., Japan and Indian vessels in last year's Malabar Exercises. Image Credit: U.S. Navy Photo



(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.

தமது துணைவியார் அடேல் பாலசிங்கம் 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் வரைந்த விடயங்கள் சிலவற்றை அவர் இந்தத் தொடரில் மேற் கோள்காட்டுகின்றார். அந்தப் பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.





65
–அடேல் பாலசிங்கம்

## பிரேமதாசா – விடுதலைப் புலிகள் பேச்சு

சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் 1971 ஆம் ஆண்டு ஆட்சியின் போது, புரட்சி செய்து நசுக்கப்பட்ட மாக்சிய போராளி அமைப்பான ஜே.வி.பி. மீள முளைவிட்டு வளர்ந்து பல சிங்கள மாவட்டங்களில் குழப்பத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தி வந்தது. படுகொலைகள், வன்செயல்கள் ஆகியவை மூலம் பொதுமக்கள் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்ட இந்த மாக்சியப் புரட்சியாளர்கள், தெற்கில், பல மாவட்டங்களை விடுதலை செய்திருந்தனர் என்பதோடு, அரசின் நிர்வாக அமைப்பைச் செயலிழக்கச் செய்திருந்தனர். இரத்தச் சகதி நிறைந்த அவர்களது வன்செயலில் ஆயிரமாயிரம் பேர் உயிரிழந்தார்கள். அரசியற் படுகொலைகள், விளக்குக் கம்பக் கொலைகள், பொதுப் புதைகுழிகள், சித்திரவதைக்கும், உறுப்புச் சிதைப்புக்கும் உள்ளாகி நதிகளில் மிதந்த பிணங்கள், எரியும் ரயர்களால் வீதிகளில் சிதை மூட்டப்பட்டு இறந்து கிடக்கும் மனிதக் கருகல்கள், காணாமற் போதல்கள் ஆகிய இவையெல்லாம் ஜே.வி.பியின் கிளர்ச்சி வன்செயலினதும், அரச பாதுகாப்புப் படைகளினது முறியடிப்புக் குரூரத்தினதும் பிரதிபலிப்புக்களாக வடிவமெடுத்தன. இவற்றின் சிகரமாக, கிளர்ச்சியாளர்கள் ஹர்த்தாலுக்கு ஆணையிட்டார்கள். அதன் விளைவாகச் சாதாரண மக்கள் சமுதாயம் முடங்கியது. பொது நிர்வாகம் கடும் பாதிப்புக்கு உள்ளாகியது. சமுதாயமே ஸ்தம்பிதம் அடைந்தது. கிளர்ச்சியாளரின் ஆணைக்கு அமையாவிட்டால் தண்டனை கடுமையாகியது. அதன் குரூரம் மக்கள் மனதில் பேரச்சத்தைத் தோற்றுவித்தது. ஜே.வி.பியின் வன்செயல் பரவ, காவல்துறை நிலையங்கள் தாக்கப்பட்டன. பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டன. பொதுப் போக்குவரத்து திடீரென நின்றது. தலைநகர் கொழும்பு தவிர்ந்த பெரும்பாலான மாவட்ட மையங்கள், ஜே.வி.பியின் கிளர்ச்சியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. கிராமப் புறங்களைக் கைப்பற்றிய பின், நகரத்தைச் சுற்றிவளைக்கும் மாவோவின் கெரில்லா முறையின் சீரிய வடிவத்தைக் கடைப்பிடித்து, புதிதாகப் பதவியேற்றிருந்த, பிரேமதாசா அரசுக்கு உடனடி அச்சுறுத்தலாக ஜே.வி.பி. கிளர்ந்தது. 1971 ஆம் ஆண்டில் கடைப்பிடித்த வழியை ஜே.வி.பியினர் இம்முறை தேர்ந்தெடுக்கவில்லை. வர்க்க முரண்பாட்டுப் பிரச்சினையையோ, பாட்டாளிப் புரட்சியையோ, முதலாளித்துவ அரசுக்கு எதிரான தமது கிளர்ச்சிப் போராட்டத்தின்மையக் கருத்தாக அவர்கள் இந்தத் தடவை முன்வைக்கவில்லை. சிறிலங்காவின் வடக்குக் கிழக்கில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பே அடிநாதப் பிரச்சினையாக முன்வைக்கப்பட்டது. சிங்கள இனத்தின் பரிசுத்த பூமியை இந்திய ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிக்க யூ.என்.பி. ஆளும் வர்க்கத்தினர் இடமளித்திருப்பதாகவே ஜே.வி.பியினர் குற்றம் சுமத்தினர். இந்தியாவின் கேந்திர அபிலாஷைகள் பற்றிக் காலாகாலமாகவே சந்தேகப்படும் சிங்களப் பொது மக்கள், இந்த அதிதீவிர தேசியப் பரப்புரையால் ஈர்க்கப்பட்டார்கள். ஓர் அந்நிய வல்லரசுக்குச் சிறிலங்காவின் இறைமைதாரை வார்த்துக் கொடுத்த அடிமைச் சாசனமாகவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை, ஜே.வி.பி. தலைமை கண்டித்தது. பிரேமதாசா அரசுத் தலைவராகப் பதவி ஏற்கும்வேளை, தலைநகரைத் தாக்க ஜே.வி.பியின் 'செம்படை' உண்மையில் தயாராக நின்றது.

பிரேமதாச தந்திரமும் அனுபவமும் கொண்ட அரசியல்வாதியாவார். வடக்கிலே விடுதலைப் புலிகளின் போருக்கான அடிப்படைக் காரணத்தையும் அவர் புரிந்து கொண்டார். தெற்கிலே ஜே.வி.பியின் கிளர்ச்சிக்கான காரணத்தையும் அவர் புரிந்துகொண்டார். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கு மாநிலங்களில் அனைத்து எட்டு மாவட்டங்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்ட இந்திய அமைதிப் படையின் பிரசன்னமே, வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி, வன்செயலுக்கான இயக்கத்தைத் தூண்டிவிட்டிருந்தது என்ற சரியான முடிவுக்கு அவர் வந்தார். இந்தியப் படைகளைக் களைப்புறச் செய்து, வலுவிழக்கச் செய்யும் நோக்குடனேயே விடுதலைப் புலிகளின் கெரில்லாப் போர் வடிவெடுத்தது. இப்போர் தீவிரம் குறைந்து இழுபட்டுச் செல்லும் போராட்டமாக மாறிவிட்டிருந்ததால், இந்தியப் படைகள் கால வரையறையின்றி இலங்கை மண்ணிலே தரித்துவிடக் கூடும் என்றும் பிரேமதாச அஞ்சினார். இந்திய - இலங்கை ஒப்பந்தமோ, இந்திய இராணுவத்தின் பிரசன்னமோ இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க மாட்டாதென்றும் அவர் கருதினார். வெளிநாட்டு இராணுவத் தலையீட்டுக்கும் ஆக்கிரமிப்புக்கும், காரணம் சிங்கள அரசியல் தலைமையிடம் தூரநோக்கோ மன உறுதியோ இல்லாமையே என்றும் அவர் நினைத்தார். இந்தியப் படைகளை நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டு வடக்கிலும் தெற்கிலும் உள்ள போராளிகளை அமைதிப் பேச்சுக்கும் நல்லிணக்கத்துக்கும் வருமாறு அழைக்க வேண்டும் என்பதே அவருடைய உடனடி நோக்கமாக இருந்தது.

பிரேமதாசாவின் பூர்வீகத்தைப் பார்க்கும் போது, அவரை ஒரு 'சாதாரண மனிதராகக்' கணிப்பிடலாம். இருப்பினும் பிரோதாசவில் இருந்த அந்தச் சாதாரண மனிதம், ஆழமான சிங்கள பௌத்த உணர்வுகளைக் கொண்டிருந்தது. அவருடைய பதவிப் பிரமாண வைபவம் 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதியில் இடம்பெற்றது. சிங்கள பௌத்தத்தின் இதய பூமியான கண்டியில், பற்கோவிலான தலதா மாளிகையில் தமது பதவிப் பிரமாண வைபவத்தை நடத்த அவர் ஒழுங்கு செய்தமையில் இருந்தே அவருடைய பௌத்த உணர்வுகள் தெளிவாகத் தெரிந்தன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தலம் தேர்ந்தெடுக்கப்பட்டமை, அவருடைய அரசியல் இலக்குகளின் விசாலத்தை உணர்த்தின எனலாம். புனித பற்கோவிலைத் தமது தனிப்பட்ட வாழ்வின் முக்கிய நாளன்று தேர்ந்தெடுத்தமை பௌத்தம் மட்டில் அவருடைய ஆழ்ந்த பற்றையும், அரச அலுவல்களை விட மதத்துக்கு முதன்மை அளிக்கும் பௌத்த மரபை அவர் முக்கியத்துவப்படுத்துவதையும் காணலாம். வரலாற்றுப் பூர்வமாக ஆழப்பதிந்துள்ள சிங்களத் தேசிய உணர்வுகளை வெளிப்படையாக இது முன்னிலைப்படுத்துவதாகும். வடக்குக் கிழக்கை இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருப்பது தொடர்பாக நாடு பூராவும் வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பு உணர்வையே பிரேமதாசாவும் கொண்டிருந்தார் என்று கூறலாம். வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வரலாறு படைத்த கண்டியை, பிரேமதாசா தெரிவு செய்ததன் மூலம் இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பைத் தாமும் எதிர்க்கின்றமையையும் நாட்டிலிருந்து அந்தப் படைகளை வெளியேற்றத் தாம் எண்ணியிருந்தார் என்பதையும் பிரேமதாசா தெளிவாக எடுத்துணர்த்தினார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கும், நாட்டில் இந்தியத் தலையீட்டை ஆழமாக்கும் எந்த அரசியல் ஏற்பாட்டுக்கும் பிரேமதாசா தொடர்ச்சியாக எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார் என்பது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பிரசித்தமானது.



## பேச்சுக்கு அழைப்பு

அரசுத் தலைவர் பிரேமதாசா 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதியில் தலதாமாளிகையில் இருந்து நாட்டுக்கு விடுத்த செய்தியில், பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கும், ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுத்தார். இனப் பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்றும் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு இன்றி அது தீர்க்கப்பட வேண்டியது என்றும் கூறியமை இந்தியாவின் முகத்தில் அறைந்தது போல அமைந்தது. சிறிலங்காவின் ஓர் அங்குலத்தையும் அந்நியருக்கு விட்டுக் கொடுக்க மாட்டார் என்றும் சபதம் உரைத்தார். விடுதலைப் புலித் தலைமையைப் பொறுத்தவரையிலே, செய்தி தெளிவாக இருந்தது, புதிய அரசுத் தலைவர் இந்தியாவை எதிர்க்கும் கொள்கையோடு நின்றார். விடுதலைப் புலிகள் அப்போது இருந்த நிலையில், பிரேமதாசாவின் நிலைப்பாட்டைப் பற்றிக் கருத்தில் எடுப்பது நல்லது எனப்பட்டது. அந்தத் தருணத்தில், லண்டனில் இருந்த பாலா, பிரபாகரன் அவர்களுடன் தொலைத் தொடர்பு பேணி வந்தார். பிரேமதாசா ஆட்சியினருடன் பேச்சு நடத்துவதற்கு பாலா ஆதரவாக இருந்தார் என்பதும் எனக்குத் தெரியும். புதிய அரசுத் தலைவருடன் விடுதலைப் புலிகள் கூட்டுச் சேர்ந்து, அமைதிப் படையைத் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்றக் கூடுமாக இருந்தால், அது குறிப்பிடத்தக்க சாதனையாக இருக்கும் என்று பாலா என்னிடம் குறிப்பிட்டார். பதில் கொடுக்கும் முன் கொழும்பில் வேறு என்ன வளர்ச்சி ஏற்படுகின்றன என்று அவதானித்தோம். அவசர கால நிலையைப் பிரேமதாசா அகற்றினார். நல்லிணக்கச் சமிக்ஞையாக ஜே.வி.பியின் முழுநிலைப் போராளிகள் 1800 பேரை விடுதலை செய்தார். அதனால், ஜே.வி.பியினரும் தமது பயங்கர நடவடிக்கைகளை இரண்டு மாதங்கள் கைவிட்டார்கள். ஆனால், விடுதலையான இளைஞர்களையும் சேர்த்து, தங்கள் அணிகளுக்குப் புத்துயிர் அளித்து, முழுமூச்சுடன் திரும்பவும் தம் கிளர்ச்சிப் போராட்டத்தை பிரேமதாசா ஆட்சிக்கு எதிராகத் தொடங்கினர். ஜே.வி.பி. மட்டில் தமது நல்லெண்ண முயற்சி வெற்றியளிக்காது என்பதைப் பிரேமதாசா உணர்ந்தார். இராணுவ ரீதியாக அவர்களை ஒடுக்குவதைத் தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை. தமது ஆட்சிக்குப் பெருஞ்சவாலாக அமைந்துவிட்ட ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தெற்கில் அடக்குவதானால் அதற்கு முன், இந்திய அமைதிப் படையை வெளியேறச் செய்ய வேண்டும் என்று உணர்ந்தார். இதற்கு விடுதலைப் புலிகளின் ஆதரவு அவருக்குத் தேவையாக இருந்தது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# உறவினர்களுக்கு வேதனை உயர் மட்டத்தோருக்கு இலாபம்?

## துஷ்பிரயோகம் செய்யப்படும் காணாமற் போனோர் விவகாரம்....

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் பெப்ரவரி 09 ஆம் திகதி கொழும்பிலுள்ள உயர் மட்ட அமைச்சர்களைச் சந்தித்தனர். இவர்கள் இந்தச் சந்திப்பில் தமது பொறுமை குறைந்து கொண்டு செல்வதாகவும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பாக இன்னமும் பதிலளிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வடக்கிலிருந்து ஆறு மணித்தியால பேருந்துப் பயணத்தின்மூலம்கொழும்பு சென்றடைந்த இவர்கள் போரின் போது காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைப் பல ஆண்டுகளாகத் தேடி வருகின்றனர். மே 2009 இல் இறுதி யுத்தம் இடம்பெற்ற போதும் அதற்குப் பின்னரும் காணாமல் போன தமது மகன்கள், மகள்கள் மற்றும் துணைவர்களுக்கு என்ன நடந்தது என்று அறிவதற்கான பல்வேறு முயற்சிகளை இந்தத் தமிழ் மக்கள் மேற்கொண்ட போதும் அவர்கள் இதில் இன்னமும் வெற்றி கொள்ளவில்லை.

கடந்த ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டமையை அடுத்தே இந்தச் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்த மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன வவுனியாவுக்கு விஜயம் செய்து இந்த மக்களைச் சந்தித்தார் என்பதுடன், கொழும்பில் உயர்மட்ட சந்திப்பொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதாகவும் அதில் கலந்து கொண்டு பிரச்சினைகளைக் கூறுமாறும் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளில் 15 பேர் கொழும்பு நோக்கிப் பயணமாகினார். இந்தச் சந்திப்பின் போது இந்த உறவுகள் தமது மனக் குமுறல்களை வெளிப்படுத்தினர், ஆவேசமான கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அவர்கள் வெறுப்படைந்து காணப்பட்டனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. 'எமக்கு அவர்கள் மீது நம்பிக்கை இல்லை' என்று சந்திப்பில் கலந்து கொண்ட உறவுகளில் ஒருவர் அமைச்சர்களிடம் தெரிவித்தார் எனவும் கூறப்படுகிறது.

மூன்று மணித்தியாலங்கள்வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட 15 பேரின் வழக்குகளை முன்னுரிமைப்படுத்துவதாக இலங்கை பொலிஸ் மா அதிபர் மற்றும் அமைச்சர்கள் வாக்குறுதி வழங்கியமையையடுத்து இந்தச் சந்திப்பு நிறைவு பெற்றது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் 'அரசுடன் தனிப்பட்ட உடன்பாட்டுக்கு' வந்தனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் இலங்கை அரசால் கூறப்பட்ட பதில் திருப்தியளிக்கவில்லை என்பதால் இவர்கள் மீண்டும் தமது சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரலாம்' என்று இந்த உறவுகள் சார்பாக நீதிமன்றில் வாதிடும் மனித உரிமைகள் சட்டவாளர் கே.எஸ். இரட்ணவேல் தெரிவித்தார்.

1995ஆம் ஆண்டு தொடக்கம் காணாமற்போன 65 ஆயிரம் முறைப்பாடுகளை இலங்கை அரசு பெற்றுள்ளது என்று அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. காணாமற்போன உறவுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு 1990களிலிருந்து குறைந்தது ஆறு வரையான ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆனால் இவற்றுள் எந்தவோர் ஆணைக்குழுவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பதில் அளிக்க வில்லை.

'காணாமற்போன உறவுகள் இறுதியாக எங்கே காணப்பட்டனர் என்பது தொடர்பான விரிவான விளக்கத்தை இவர்களின் குடும்பத்தினர் கூறியுள்ள போதிலும் இன்னமும் இவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. சில வழக்குகளில் தமது உறவுகள் காணாமற்போனமைக்குக் காரணமான சந்தேக நபர் யார் என்பது தொடர்பாக அவர்களின் குடும்பத்தினர் பெயர் குறிப்பிட்டும் உள்ளனர்' என மட்டக்களப்பில் பணியாற்றும் தொண்டுப் பணியாளர் ஒருவர் அண்மையில் 'தி இந்து' ஊடகத்திடம் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கடத்தல்களில் பங்குபற்றிய பாதுகாப்புப் படையினர் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தொடர்பாகவும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் இலங்கை இராணுவத்திடம் எப்போது எங்கே சரணடைந்தார்கள் என்பது தொடர்பாகவும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பது தொடர்பாகவும் விரிவான தகவல்களைத் தெரிவித்த போதிலும் இன்னமும் இவர்களது பிரச்சினைக்கான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை.



காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்படும் ஆணைக் குழுக்களிடம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மீண்டும் மீண்டும் முறைப்பாடுகளைச் செய்யும் போது இவர்களின் மனவடுக்கள் மேலும் அதிகமாகின்றன. காணாமலாக்கப்பட்ட குடும்பத்தினர் தமது உறவுகள் உயிருடன் உள்ளார்கள் எனத் தொடர்ந்தும் தேடிக் கொண்டிருக்கும் அதே வேளையில் இவர்கள் பெரும்பாலும் இறந்திருப்பார்கள்' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2015 ஐ.நா. தீர்மானத்தைத் தொடர்ந்து, காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்கான அலுவலகம் ஒன்றை அமைப்பதாக ஜெனிவாவில் இலங்கை வாக்குறுதி வழங்கியது. 'கடந்த ஓகஸ்ட் மாதம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை நாடாளுமன்றில் சட்டமூலம் ஒன்று நிறைவேற்றப்பட்ட போதிலும் இதுவரை இவ்வாறானதோர் அலுவலகத்தை அமைப்பதற்கான எந்தவொரு நகர்வும் முன்னெடுக்கப்படவில்லை' என அனைத்துலக மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி ஜொலண்டா பொஸ்ரர் தெரிவித்தார்.

பொருளாதார திட்டம் ஒன்றையும் இலங்கை அரசு தமக்கு வழங்கத் தவறியுள்ளது என்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர். தமது உறவுகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தி அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைத் தமக்குத் தருமாறு அரசிடம் கோரிக்கை விடுத்த போதும் அது நிறைவேற்றப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வடக்கு மாகாண சபை ஆகியன அதிகமாகப் பணியாற்ற முடியும் எனவும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"இந்தக் குடும்பங்களைப் பொறுத்தளவில் கொழும்பில் இடம்பெற்ற உயர் மட்டச் சந்திப்பானது தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான பிறிதொரு தளமாகக் காணப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்தியவர்கள் இந்த வாய்ப்பை தமது அரசியல் எதிரிகளைத் தாக்குவதற்கே பயன்படுத்தியுள்ளனர்" என யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் சமூகப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

வழிமூலம் - *The Hindu*
ஆங்கிலத்தில் - *Meera Srinivasan*
மொழியாக்கம் - நித்தியபாரதி

# கட்டுக்குருந்த படகு விபத்து; 29 பேரது சடலங்கள் மீட்பு!

## தேடும் பணிகள் தொடர்கின்றன

கொழும்பு, பெப்.22

களுத்துறை - கட்டுக்குருந்த கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகி மரணித்தோர் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் படகில் பயணித்தவர்களைத் தேடும் பணிகள் மூன்றாவது நாளாக நேற்றும் இடம்பெற்றன.

தேவாலய திருவிழாவுக்காகத் திருச்சொரூபத்தைச் சுமந்து பேருவளையிலிருந்து சென்ற படகு கட்டுக்குருந்தக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளானது.

இதன்போது படகில் பயணித்தவர்களில் 29 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஒருவர் காணாமற்போயுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

15 கடற்படைச் சுழியோடிகள் இரண்டு டோரா படகுகளுடன் பெருந்தொகையான கடற்படை வீரர்களும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கடற்படைப் பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் சமிந்த வலாகுலுகே தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான படகில் சிறுவர், பெண்கள் உட்பட 40 பேர் வரை பயணித்திருந்தனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனினும் எத்தனை பேர் பயணித்தனர் என்பது தொடர்பாக முழுமையான விவரம் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு பயணித்தவர்களில் ஒருவரேனும் உயிர் பாதுகாப்பு அங்கியை அணிந்திருக்கவில்லை என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஐ)

# வீட்டுத் திட்ட வசதி கிடைக்காத பனிக்கர்புளியங்குளம் மக்கள்

வவுனியா, பெப்.22

வீட்டுத்திட்ட வசதிகள் கிடைக்காமையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று வவுனியா, பனிக்கர்புளியங்குளம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நொச்சுமோட்டை கிராம சேவகர் பிரிவில் உள்ள ஒரு கிராமமே பனிக்கர்புளியங்குளம். யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்ந்த இந்தக் கிராம மக்கள் இந்தியாவிலும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சம் அடைந்திருந்த நிலையில் 2004 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டனர்.

இவ்வாறு மீள்குடியேறிய 162 குடும்பங்களில் 59 குடும்பங்களுக்கு வீடுகள் கிடைத்த போதிலும் ஏனையோருக்கு இதுவரை வீட்டுத் திட்டங்கள் கிடைக்கவில்லை.

தற்காலிகக் கொட்டில்களில் அவர்கள் அவலம்



மீள்குடியேறி 13 வருடங்கள் கடந்துள்ள போதும் வீட்டுத் திட்டம் மட்டுமன்றி அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தின் உள்ளக வீதிகள் உட்பட பிரதான வீதிகளும் செப்பனிடப்படாமல் உள்ளன. குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்கொள்ளும் அந்த மக்கள் மழைக்கும், வெயிலுக்கும் ஊசலாடிக் கொண்டிருக்கும் தற்காலிக கொட்டில் வீடுகளிலேயே வாழ்கின்றனர்.

அரசால் வழங்கப்படும் வீட்டுத் திட்டங்களில் தமது கிராமத்தையும் முன்னுரிமைப்படுத்தி தாம் நிம்மதியாக வாழ அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் உதவ முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-100)

## ச.ச.நிலைய கதவுடைப்பு பொலிஸில் முறைப்பாடு

கரவெட்டி,பெப்.22

கரவெட்டியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றின் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளன என்று நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி இரவு மத்தொனி கரவையூர் அறிவக சனசமூகநிலையத்தின் கதவே திருடும் நோக்கில் உடைக்கப்பட்டுள்ளது என்று தலைவரால் நெல்லியடிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-40)

# உள்ளூராட்சி மன்றங்களது செயற்பாடுகள் தற்போது முடக்கப்பட்டுள்ள நிலையில்!

## விரைந்து தேர்தலை நடத்துமாறு டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, பெப்.22

நாடளாவிய ரீதியில் தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளில் முடக்கப்பட்ட ஒரு நிலையே தென்படுகின்றது. இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் விரைவில் நடத்தி முடிக்கப்படவேண்டியது அவசியம்.

-இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டின் சுத்தம், சுகாதாரம் உட்படப் பல்வேறு அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகாத நிலையில், டெங்கு நோயின் தாக்கம் பரவலாக வியாபித்து வருகின்றது. பல்வேறு நோய்கள் பரவுகின்ற அபாயமும் தோன்றியுள்ளதுடன் பல்வேறு சீர்கேடுகளும் அதிகரித்துள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை உடன் நடத்தி, மக்கள் பிரதிநிதிகளிடம் அவை ஒப்படைக்கப்படவேண்டும்.

நாடளாவிய ரீதியில் தற்போது மக்கள் பிரதிநிதிகளின்றி செயற்படும் உள்ளூராட்சி சபைகள் பலவற்றின் மக்கள் நலன் சார்ந்த பணிகளின் வினைத்திறன்கள் அற்றுப் போயுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் எங்கும் டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்கள் பெருகியுள்ளன.

இனந்தெரியாத வைரஸ்களால் ஏற்படும் பல்வேறு நோய்களை தற்போது அதிகளவில் தென்பகுதிகிராமங்களிலே காணக்கூடியதாக உள்ளது.

எனவே, தற்போதைய உடனடித் தேவையாக இருப்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை உடன் நடத்துவதே.

புதிய தேர்தல் முறைக்கு அமைவாக நடத்த காலதாமதமாகுமெனில், பழைய முறையில் நடத்தப்படலாம். அல்லது முன்னைய நிர்வாகிகளிடம் தேர்தல் நடத்தப்படும்வரை சில காலத்துக்கு உள்ளூராட்சி மன்றங்களை ஒரு தற்காலிக ஏற்பாடாக ஒப்படைக்கலாம்.- என்றார். (ஐ)

## காந்தி ஐயாவின் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

திருகோணமலையில் அண்மையில் காலமான 'இறைபணிச்செம்மல்', 'காந்தீயச் சுடர்' காந்தி ஐயாவுக்கான அஞ்சலிக்கூட்டம்அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும்26 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சங்கத்தின் தலைவர் ந. சிவகரன்தலைமையில் நடைபெறும்.

அஞ்சலி உரைகளை ஓய்வு நிலை கமத்தொழில்சேவை பெரும்பாக உத்தியோகத்தர் வை.பாலகிருஷ்ணன், காந்தி நிலைய துணைச் செயலாளர் செ. சுப்பிரமணியம், பண்டிதர் வீ. ஏ. தங்கமயில், அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி ஆகியோர் ஆற்றுவர்.

காந்தி வாத்தியார் நினைவாக 'காந்தீயம்' சிறப்பிதழும் இந்நிகழ்வில்வெளியிட்டுவைக்கப்படும். காந்தி ஐயாவின் அபிமானிகளும் பொதுமக்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (ஐ-40)

## கூட்டு எதிர்க்கட்சியினரின் யோசனைகள் நிராகரிப்பு

விதுர விக்ரமநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு

புதிய அரசியல் சாசனம் குறித்த கூட்டு எதிர்க்கட்சியின் அனைத்து யோசனைகளையும் அரசு நிராகரித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டின் ஐக்கியத்தை பாதுகாக்கும் கடப்பாட்டை அரசு உதாசீனம் செய்கிறது.

அரசியல் சாசனம் உருவாக்கும் துணைக்குழுக்களில் கூட்டு எதிர்க்கட்சியின் அங்கத்தவர்கள் உள்ளடங்கியிருந்த போதிலும் அவர்களின் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 14 யோசனைகளைத் தாம் முன்மொழிந்த போதிலும் அவை நிராகரிக்கப்பட்டன.புதிய அரசியல் சாசனம் குறித்த விடயங்களில் நாட்டைப் பிளவுபடுத்தக்கூடிய விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.- என்றார்.(ஐ)

## நாடு என்ற ரீதியில் அதிகாரப் பகிர்வு தேவை

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.22

நாடு என்ற ரீதியில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டியது அவசியமாகின்றது என்று அமைச்சர்லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டம்கொண்டு வரப்பட்டாலும் அதிகாரங்கள் உரிய முறையில் பகிரப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெறும் ஆவணங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றே காணப்படுகின்றது. 13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படவேண்டும் என்று முதன் முதலாக கூறியவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டை ஆட்சி செய்த அனைத்துக்கட்சிகளும் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சித்ததாகக்கூறிய அவர், 13ஆம் திருத்தச்சட்டம்கொண்டு வரப்பட்டாலும் அதிகாரங்கள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும் கிரியெல்ல மேலும் தெரிவித்தார் .(ஐ)

# பொதுநலம் கருதியோரது கொடைகள் மூலமே சிறந்த மக்கள் சேவையை ஆற்ற முடிகிறது

## தெல்லிப்பழை வைத்திய அத்தியட்சகர் திவாகர் பெருமிதம்

யாழ்ப்பாணம், பெப்.22

தனிப்பட்ட நபர்களின் தன்நலம் கருதாத பொதுநலம் கருதிய கொடைகளாலும் சேவைகளாலுமே எம்மால் எமது வைத்தியசாலையை நல்ல நிலையில் இயங்க வைக்க முடிவதுடன், சிறப்பான மக்கள் சேவையையும் மருத்துவப் பணிகளையும் ஆற்றமுடிகிறது.

-இவ்வாறு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் யோ.திவாகர் தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பெண்நோயியல் மற்றும் மகப்பேற்று நோயாளர்களுக்கான 'கிளினிக்' நேற்று முன்தினம் வைத்தியசாலையில்திறந்துவைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணசபையின் ஆளுகைக்குட்பட்ட எமது ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநல சிகிச்சைப் பிரிவு ஆகிய இரண்டு விசேட பிரிவுகள் காணப்படுகின்றன. இந்த இரண்டு பிரிவுகளும் யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய போதனா வைத்தியசாலையாகவும் எமது வைத்தியசாலை காணப்படுகின்றது.

மத்திய அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தில் தனது ஆளுகைக்குட்பட்ட போதனா வைத்தியசாலைகளுக்கு 80 வீதமான நிதியை ஒதுக்கிவிட்டு, மாகாணங்களுக்கு 20 வீதமான நிதியையே வழங்குகின்றது.

அந்த நிதியை மாகாணம் - அதுவும் எமது வடக்கு மாகாண அரசு - தனது 5 மாவட்டங்களுக்கும் - அதன் கீழுள்ள 5 மாவட்டங்களிலுமுள்ள 600 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகளுக்குப் பங்கிடுகின்றது.

எமது வைத்தியசாலையைப் பொறுத்தமட்டில் அதில் மிகவும் ஒரு சொற்பம்தான் கிடைக்கின்றது. இந்த நிதியை வைத்துக் கொண்டு நாம் எவ்வாறான சேவையை மக்களுக்கு வழங்கமுடியும்?



நான் வைத்திய அத்தியட்சகராக இந்த வைத்தியசாலைக்குபதவியேற்று வருகைதந்தேன். என்னைப் பொறுத்தமட்டில் கிடைக்கும் வளங்களை வைத்துக்கொண்டு, ஓர் அத்தியட்சகர் என்ற பெயருடன்வெட்டியாக வேலை செய்துவிட்டு வீடுசெல்வதை நான் என்றும் விரும்புபவன் அல்லன். ஒரு விடயத்தை வெற்றிகரமாக ஆற்றிமுடிக்கப் பட்டவுடன் திருப்தியுறுபவனும் நான் அல்லன். எனக்குரிய தேவைகள் - வைத்தியசாலைக்குரிய தேவைகள் - என்பன தொடர்ந்து கொண்டே காணப்படும். இங்கு தற்போது நியமனமாகி வருகைதந்துள்ள மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணபவனும் அவ்வாறானவர்தான். அவரும் எதிலும் திருப்தி கொள்பவரல்லர்.

நான் வைத்திய அத்தியட்சகராக மீண்டும் இந்த வைத்தியசாலைக்கு வருகைதந்தவுடன் மக்கள் பிரதிநிதிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், பொது அமைப்புக்கள் என்று அனைவரிடத்திலும் எமது வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் கோரி விண்ணப்பித்திருந்தேன்.

அதன்ஒருகட்டமாகவே ஏழாலை களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் இந்தப் பெண்நோயியல் மகப்பேற்று 'கிளினிக்'கை அமைப்பதற்கு 6 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். மிகுதி எமது வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினரின் நிதியுதவியுடன் 15 லட்சம் ரூபா பெறுமதியிலான இந்த கிளினிக்கை உருவாக்கியுள்ளோம்.

இதிலும் பாராட்டப்படவேண்டிய விடயம் என்னவென்றால், எமது வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் முன்பு கடமையாற்றி, தற்போது வரை நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாது வேதனம் எதுவும் எதிர்பாராமல் எமது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரத் தொண்டர்களை வைத்துத்தான் அவர்களின் இரவு - பகல் சேவையூடாக 10 நாள்களில் இந்தப் பிரிவை உருவாக்கியுள்ளோம்.

இவ்வாறான தொழில்நுட்ப அறிவுமிகுந்த - கடமை உணர்வு மிக்கவர்களை நிரந்தர நியமனங்களின்போது அரசியல் தலைமைகள் கவனத்தில் எடுக்காதமைதான் எமக்கு வேதனையளிக்கின்றது. - என்றார்.

இந்நிகழ்வில்நல்லை குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள், மகப்பேற்று வைத்திய நிபுணர்ந.சரவணபவ, வைத்திய நிபுணர்கள்,வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைச்சமூகத்தினர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் உட்படப் பலர்கலந்து கொண்டனர். (ஐ)

### மே.14 இற்குள் உள்ளூராட்சித் தேர்தல்

தமிழகத்தில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ரத்து செய்யப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை, பாடசாலை பரீட்சைகள் முடிந்த பின்னர் மே மாதம் 15 ஆம் திகதிக்குள் தான் நடத்த முடியும் என்று மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது.

ஆனால், மாநில தேர்தல் ஆணையத்தின் பதிலை ஏற்கச் சென்னை உயர் நீதிமன்றம் மறுத்து விட்டது. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வழக்கில் மாநில தேர்தல் ஆணையம் தொடர்ந்த மேல் முறையீட்டு மனு மீதான விசாரணையின் போது சென்னை உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (எ)

# இனப்படுகொலையை விட மோசமானது தமிழ்ப்பெண்களுக்கு ஏற்பட்ட கொடுமை

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கண்டனம்



சென்னை, பெப்.22

இலங்கை இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் கொடுமை இனப்படுகொலையை விட கொடுமையானது என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பெண்களைப் பாலியல் அடிமைகளாக வைத்திருந்த இராணுவத்தினரைக் கைது செய்து தண்டிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை போரின் போது தமிழ்ப் பெண்களை இலங்கை இராணுவத்தினர் பாலியல் அடிமைகளாக வைத்திருந்தனர் என்று தென் ஆபிரிக்காவை தலைமை இடமாகக் கொண்ட உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. அதற்கான ஆதாரங்களையும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை இராணுவத்தினரின் இந்தச் செயலுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஈழப் போரின் போதும் ராஜபக்ஷ ஆட்சியின் போதும் அதன்பின்னர் அமைந்த மைத்திரிபால சிறிசேன அரசின் கீழும் கைது செய்யப்பட்டு சரணடைந்த தமிழ்ப் பெண்களை இலங்கை இராணுவத்தினர் பல்வேறு முகாம்களில் அடைத்து வைத்து பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தினர் என்ற அதிர்ச்சியளிக்கும் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இந்தக் கொடுங்குற்றத்தைச் செய்த குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு இந்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் இந்தக் கொடுமை இனப்படுகொலையை விட மோசமானது.

இப்போதாவது சர்வதேச சமூகமும் ஐ.நா. சபையும் இலங்கை போர்க்குற்றங்களிலும் இனப்படுகொலையிலும் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றுள்ளது. (எ)

### ஸ்டாலின் தாக்கல் செய்த வழக்கு இன்று விசாரணை


மு.க.ஸ்டாலின் தொடர்ந்த வழக்கு மீதான விசாரணை இன்று நடைபெறும்.

சட்டசபையில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தாக்கல் செய்த நம்பிக்கை கோரும் தீர்மானத்துக்கு ஆதரவாக சபாநாயகர் ப.தனபால் எடுத்த முடிவு செல்லாது என்று அறிவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்றுமுன்தினம் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதாகக் கூறிய நீதிபதிகள், நேற்று செவ்வாய்க்கிழமை அவசர வழக்காக விசாரிக்கப்படும் என்று தெரிவித்திருந்தனர்.

எனினும் நேற்றைய வழக்கு விசாரணைப் பட்டியலில் அந்த வழக்கு இடம் பெறவில்லை என்பதனால் மனு மீது இன்று புதன்கிழமை விசாரணை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (எ)

# கர்நாடக அரச பஸ் எரிந்து நாசம்! ஒருவர் கருகிப் பலி; 30 பேர் தப்பினர்



பெங்களூர், பெப்.22

கர்நாடக அரச பஸ்ஸில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்; 30 பேர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர்.

பெங்கர் மாவட்டத்தின் புறநகர் பகுதியான நெலமங்கலா என்ற இடத்தில் நேற்று அதிகாலை அந்த மாநில அரசுக்குச் சொந்தமான பஸ் ஒன்று திடீரென பற்றி எரிந்தது. சிக்மளூருவில் இருந்து பெங்களூருக்கு பஸ் சென்று கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தத் தீ விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த பெண் ஒருவர் தீயில் கருகி உயிரிழந்தார். ஏனைய 30 பயணிகளும் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர். அவர்களில் 2 பேருக்கு மட்டுமே இலேசான காயங்கள் ஏற்பட்டன. அவர்கள் இருவரும் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# ருவாண்டா – இந்தியா இடையே மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்து



ருவாண்டா சென்றுள்ள குடியரசு துணைத் தலைவர் ஹமீது அன்சாரி, அந்த நாட்டு ஜனாதிபதி பால்ககாமேவை, தலை நகர் கிகாலியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது, விமானப் போக்குவரத்து, விசா நடைமுறைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவை தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே 3 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள ருவாண்டா, உகண்டா ஆகிய இரு நாடுகளுக்கு ஹமீது அன்சாரி 5 நாள்கள் பயணம் மேற்கொண்டுள்ளார். பயணத்தின் முதல்கட்டமாக, ருவாண்டா தலைநகர் கிகாலியை ஞாயிற்றுக் கிழமை ஹமீது அன்சாரி சென்றடைந்தார்.

பின்னர், கிகாலியில் இந்திய சமூகத்தினரிடையே ஹமீது அன்சாரி உரையாற்றினார்.

அதையடுத்து அங்குள்ள ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற அன்சாரி, ஜனாதிபதி பால்ககாமேவைச் சந்தித்துப் பேசினார். அப்போது, இந்தியா - ருவாண்டா இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இரு தலைவர்களும் விவாதித்தனர். அதனைத் தொடர்ந்து, அவர்கள் முன்னிலையில் இரு நாடுகள் இடையே மூன்று முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. (எ)

# மகாத்மா காந்தி கொலை வழக்கில் தகவல்களை வெளியிடுமாறு சி.ஐ.சி. மத்திய அரசுக்கு உத்தரவு

டில்லி, பெப்.22

மகாத்மா காந்தி கொலை வழக்கில் ஜே.எல்.கபூர் ஆணையம் அறிக்கையின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என்று பிரதமர் அலுவலகத்துக்கு மத்திய தகவல் ஆணையம் (சி.ஐ.சி) உத்தரவிட்டுள்ளது.

வீர சாவர்க்கர் மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் மகாத்மா காந்தி கொலை சதியில் ஈடுபட்டார்கள் என்று கபூர் ஆணையம் அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது எனக் கூறப்படுகிறது.

முன்னதாக, ஹேமந்த் பாண்டா என்பவர் மகாத்மா காந்தி படுகொலை தொடர்பான பல்வேறு விவரங்களைக் கேட்டு மத்திய தகவல் ஆணையத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதில், வரலாற்று ஆராய்ச்சியாளரான நான், 1948 ஆம் ஆண்டு நாதுராம் கோட்சேவால் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டார் என்பது தொடர்பில் ஆய்வு மேற்கொண்டு வருகிறேன்.

இது தொடர்பாக தேசிய ஆவணக் காப்பகத்தில் பல்வேறு ஆவணங்களை நான் பார்வையிட்டபோது, மகாத்மா காந்தி படுகொலை வழக்கின் மிக முக்கிய ஆவணங்களான இறுதி குற்றப் பத்திரிகை, கோட்சேவை தூக்கிலிடுவதற்கான உத்தரவு ஆகியவை எங்கும் கிடைக்கவில்லை என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களைத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், காந்தி கொலை வழக்குத் தொடர்பாக ஜே.எல்.கபூர் ஆணையம் அறிக்கையின் பேரில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற விவரத்தை வெளியிட பிரதமர் அலுவலகத்துக்கு மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தகவல் ஆணையர் ஸ்ரீதர் ஆச்சார்யலு கூறுகையில்,

''கபூர் ஆணையம் அறிக்கை டில்லியில் உள்ள இந்திய சட்டக் கல்வி நிலையத்தில் உள்ளது. இதேபோல மகாத்மா காந்தி படுகொலை, அது தொடர்பான விசாரணை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் வெளிப்படையாக அரசு வெளியிட வேண்டும்.

அண்மையில் நேதாஜி தொடர்பான பல்வேறு இரகசிய ஆவணங்களை வெளியிட மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது.



இது போல் தேசத் தலைவர்களின் வாழ்க்கை, மரணம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் வெளியிடுவதே சிறந்த வெளிப்படைத் தன்மைக்கு அடையாளமாகும்'' என்றார். (எ)

### ஜனாதிபதியை நாளை சந்திக்கிறார் ஸ்டாலின்!

சென்னை, பெப்.22

சட்டசபையில் நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, நடைபெற்ற விவகாரம் தொடர்பாக, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை நாளை வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு சந்தித்து மு.க. ஸ்டாலின் மனு அளிக்க உள்ளார்.

அவருடன் தி.மு.கவின் மாநிலங்களவை உறுப்பினர்களும் செல்ல உள்ளனர். மேலும் பேரவையில் நடைபெற்ற வாக்கெடுப்பை செல்லாது என்று அறிவிக்க ஆவன செய்யுமாறு வலியுறுத்த உள்ளனர். (எ)

## வடகொரியாவுடன் பேசவுள்ளது அமெரிக்கா

வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட உள்ளது. வடகொரியாவின் சிரேஷ்ட அதிகாரிகளை அமெரிக்காவுக்கு அழைத்து பேச்சு நடத்தும் முனைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஐந்து ஆண்டுகளில் இவ்வாறான சந்திப்பு எதுவும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் முதனிலை ஊடகங்களில் ஒன்றான வொஷிங்டன் போஸ்ட் ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. ட்ரம்பின் அரசுடன் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் தொடர்புகளை பேண விரும்புகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் ஒரு கட்டமாகவே இந்தப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படஉள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## பாதுகாப்பு ஆலோசகரை தெரிவு செய்தார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது புதிய பாதுகாப்பு ஆலோசகரைத் தெரிவு செய்துள்ளார்.

இந்தப் பதவியில் இருந்துமைக்கல் ப்லைன், ரஷ்யாவுடன் கொண்டிருந்த தொடர்பின் காரணமாக பதவி விலகினார்.

அதனை அடுத்து கடற்படைத் தளபதி ரொபர்ட் ஹவார்ட் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட போதும், அவர் அந்தப் பதவியைப் புறக்கணித்தார்.

இந்தநிலையில் முன்னாள் அமெரிக்க இராணுவ அதிகாரியான எச்.ஆர்.மெக்மாஸ்ட்டர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ)

# பாக்.நீதிமன்றை அண்டி தற்கொலைத் தாக்குதல்!

## 5 பேர் உயிரிழப்பு



இஸ்லாமாபாத், பெப்.22

பாகிஸ்தானில் நீதிமன்ற வளாகத்தில் பயங்கரவாதிகள் நேற்று நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் மீண்டும் பயங்கரவாதிகள் தாக்குதலை ஆரம்பித்தமையால் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல்களை அடுத்து இராணுவம் பயங்கரவாதிகளைக் குறிவைத்து தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் எல்லையில் பயங்கரவாதிகளை அழிப்பதற்காக பாகிஸ்தான் இராணுவம் முற்றுகையிட்டுள்ளது. இந்தநிலையில் பாகிஸ்தானின் கைபர் பக் துன்கவா மாகாணம் சார்சத்தா நகரிலுள்ள நீதிமன்ற வளாகத்தில் பயங்கரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தி உள்ளனர். நீதிமன்ற வளாகத்தில் வழக்கமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பயங்கரவாதிகள் இந்தத் தாக்குதலை முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று முதல்கட்ட தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையே சம்பவத்தை நேரில் பார்த்தவர் ரொய்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள தகவலில்-

குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் அதிகமான சடலங்கள் காணப்படுகின்றன என்று கூறி உள்ளார்.

இதேவேளை, இந்தத் தாக்குதலுக்கு தலிபான் பயங்கரவாத இயக்கத்தின் கிளை அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ரஷ்யாவுக்கான ஐ.நா.தூதுவர் அலுவலகத்திலேயே திடீர் மரணம்



நியூயோர்க், பெப்.22

ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யாவின் வதிவிட தூதுவர் விடாலி ஜூர்க்கின், அவரது அலுவலகத்தில் பணியாற்றிய நிலையில் உயிரிழந்துள்ளார்.


நேற்று முன்தினம் தனது அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே, விடாலி ஜூர்க்கின் உயிரிழந்தார் என்று ரஷ்யாவின் நிரந்தர ஐ.நா. அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜூர்க்கின் சுமார் 40 வருடங்களைரஷ்யாவின் தேசிய பணிக்காக அர்ப்பணித்துள்ள நிலையில், 20 வருடங்கள் பெல்ஜியம் மற்றும் கனடாவுக்கான உயர்ஸ் தானிகராகவும் பணியாற்றியுள்ளார்.

2006 ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவின் ஐ.நாவுக்கான வதிவிடத் தூதுவராகப் பணியாற்றி வந்துள்ளார்.

மேலும் விடாலி ஜூர்க்கின் உயிரிழந்த சம்பவம், ஐ.நா. அலுவலகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது என ஐ.நா. அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## விமான விபத்தில் சிக்கி ஆஸியில் ஐவர் சாவு!



மெல்போர்ன், பெப்.22

ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் விமானம் ஒன்று வணிக மையத்தில் மோதி விபத்துக்கு உள்ளான தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெல்போர்ன் புறநகர் பகுதியில் அமைந்துள்ள எசன்டன் விமான நிலையத்தில் இருந்து 5 பேருடன் புறப்பட்ட சிறிய ரக விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

அந்த விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே இந்த விபத்துக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில் புறப்பட்ட அந்த விமானம் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த வணிக மையத்தின் மீது மோதி விபத்துக்குள்ளாகியது.

விமானத்தின் உடைந்த பாகங்களை அப்புறப்படுத்தும் பணிகளை மாநகராட்சி நிர்வாகம் முன்னெடுத்து வருகின்றது.


இந்த விபத்தைத் தொடர்ந்து எசன்டன் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும், விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை ஆஸ்திரேலிய போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் மேற்கொள்ள உள்ளது எனவும் மெல்போர்ன் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ)

## ட்ரம்புக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டங்கள்




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை,அமெரிக்காவின் பல பாகங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதத்தில் வரும் மூன்றாவது திங்கட்கிழமையை அமெரிக்கர்கள் அமெரிக்க ஜனாதிபதிகள் தினம் என்று வகைப்படுத்தியுள்ளனர். அன்றைய தினத்தன்று பொதுமக்களுக்கு விடுமுறை அளிக்கப்படுவது வழக்கம். அமெரிக்காவின் முதலாவது மற்றும் 16 ஆவது ஜனாதிபதிகளான ஜோர்ஜ் வொஷிங்டன் மற்றும் ஆபிரஹாம் லிங்கன் ஆகியோரது பிறந்தநாளை நினைவுகூரும் வகையிலேயே இந்த விடுமுறை அளிக்கப்படுகின்றது. இந்தநிலையில், அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து லொஸ் ஏஞ்சல்ஸ், சிக்காகோ, அட்லான்ட்டா உள்ளிட்ட 28 பகுதிகளில் இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## சர்வதேச விண்வெளி நிலையத்தை முற்றுகையிட்ட 'வேற்றுக்கிரகவாசிகள்'?




வொஷிங்டன்,பெப்.22

விண்வெளி நிலையத்தை வேற்றுக் கிரகவாசிகள் முற்றுகையிட்டனர் என 'நாசா' அதிர்ச்சி காணொலி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகள் பூமிக்கு மேல் சர்வதேச விண்வெளி ஆய்வகம் அமைத்து வருகின்றன. அந்தப் பணியில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை 3 பேர் சென்று வருகின்றனர்.

இந்தநிலையில் 'நாசா' ஒரு காணொலியை யூடியூப்பில் வெளியிட்டது. அதில் சர்வதேச விண்வெளி ஆய்வகத்தை அடையாளம் தெரியாத 5 பொருள்கள் வட்டமிட்டுச் சுற்றுகின்றன.

இதை பூமியில் கட்டுப்பாட்டு அறையில் பணியில் இருந்த டைலர் கிளங்கனர் பார்த்தார். அதுகுறித்து அவர் கூறும் போது-

சர்வதேசவிண்வெளி நிலையத்தில் அடையாளம் தெரியாத பறக்கும் பொருள்கள் தோன்றியதை நான் கண்டறிந்தேன்.

அது விண்வெளி நிலையத்தை நோக்கிப் பயணித்து வந்தது. இந்தப் பறக்கும் பொருள்களும் மிகப்பெரியன வாக இருந்தன. வேற்றுக் கிரகவாசிகள் அவற்றை இயக்கி இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அதை 'நாசா' மறுத்துள்ளது. லென்சில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அவ்வாறு தோன்றியுள்ளது. அது வேற்றுக் கிரகவாசிகள் இல்லை என்று தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தச் சம்பவம் நடைபெற்றபோது நாசா திடீரென காணொலியைத் துண்டித்தது குறிப்பிடத்தக்கது. (எ)

# கிரிக்கெட் வீரர் ஆகியிருக்காவிட்டால் கூலி வேலைக்கு சென்று இருப்பேன்!

## ஐ.பி.எல். போட்டிக்காக 3 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்ட தமிழக வீரர் நடராஜன் கூறுகிறார்

சென்னை,பெப்.22

நான் கிரிக்கெட் வீரராக ஆகியிருக்காவிட்டால், நாள் கூலி வேலைக்குச் சென்று கொண்டு இருந்திருப்பேன் என்று ஐ.பி.எல். ஏலத்தில் 3 கோடி இந்திய ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்ட தமிழக வீரர் டி.நடராஜன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்காக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஏலத்தில் பரபரப்பாக பேசப்பட்டவர்களில் தமிழக வீரர் டி.நடராஜனும் ஒருவராவார்.

25 வயதான இடக்கை வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜன் 3 கோடி இந்திய ரூபாவுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக ஏலம் எடுக்கப்பட்டார்.

இவரது சொந்த ஊர் சேலம் அருகே உள்ள சின்னப்பம்பட்டி. உடன் பிறந்தவர்கள் 4 பேர். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை சேலை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் நாள் கூலிக்கு வேலைச் செய்கிறார். தாயார் நடைபாதையில் தின்பண்டங்கள் வியாபாரம் செய்பவர்.

நடராஜன் தனது 20 வயது வரை டென்னிஸ் பந்தில் தான் கிரிக்கெட் விளையாடியுள்ளார். அதன் பின்னரே தீவிர கிரிக்கெட்டுக்கு மாறினார். சென்னைக்கு இடம் பெயர்ந்து டிவிசன் அளவிலான போட்டிகளில் விளையாடி முன்னேறினார்.

அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது, தமிழ்நாடு பிறீமியர் லீக் (டி.என்.பி.எல்.) கிரிக்கெட் போட்டியாகும்.

கடந்த ஆண்டு டி.என்.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தமிழகத்தில் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் டிராகன்ஸ் அணிக்காக களம் இறங்கினார்.

அது தான் நடராஜனை வெகுவாக அடையாளம் காட்டியது. அவரது பந்து வீச்சு, பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் முஷ்தாபிஜூர் ரகுமானின் பந்து வீச்சு போன்று இருக்கின்றது என்று வர்ணிக்கப்பட்டது.



அது மட்டுமின்றி தூத்துக்குடி பேட்ரியாட்சுக்கு எதிரான சூப்பர் ஓவரில் 6 பந்துகளையும் துல்லியமாக யோர்க்கராக போட்டு கலங்கடித்தார். இறுதிக்கட்டத்தில் நேர்த்தியாகப் பந்து வீசும் பாங்கு, ஐ.பி.எல். அணி நிர்வாகிகளைக் கவர்ந்தது.

அதன் தாக்கம், இன்று அவரை கோடீஸ்வரர் ஆக்கி இருக்கிறது. டி.என்.பி.எல். கிரிக்கெட்டில் 7 ஆட்டங்களில் 10 விக்கெட்டுகள் வீழ்த்தி இருந்தார்.

தனது ஐ.பி.எல் தெரிவு குறித்து டி.நடராஜன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

நான் கிரிக்கெட் வீரராக ஆகியிருக்காவிட்டால், நாள் கூலிக்கு வேலைக்குச் சென்று கொண்டு இருந்திருப்பேன். சொந்த ஊரில் டென்னிஸ் பந்தில் விளையாடி நிறைய கோப்பைகளை வென்று இருக்கிறேன்.

4 ஆம் டிவிசன் போட்டியில் ஆடிய போது எனது திறமையை கண்டுபிடித்து ஊக்குவித்தவர் பயிற்சியாளர் ஜெயபிரகாஷ். அவர் தான் எனது பெற்றோரிடம் பேசி என்னை சென்னையிலேயே தங்கியிருந்து விளையாட வைத்தார்.

நான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன் என்றால் எல்லா பெருமையும் அவரைத் தான் சாரும். ஏலத்தில் எடுக்கப்பட்ட தகவலை முதலில் அவரிடம் தான் பகிர்ந்து கொண்டேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்றார்.

எனது முன்மாதிரி ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஜோன்சன் ஆவார். ஐ.பி.எல். தொடரின் போது அவரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தால் அது மிகச் சிறந்த அனுபவமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

டி.என்.பி.எல். கிரிக்கெட்டில் திண்டுக்கல் அணிக்காக ஆடிய முருகன் அஸ்வின், திருவள்ளூர் வீரன்சுக்காக ஆடிய சஞ்சய் யாதவ் முறையே ஐ.பி.எல். ஏலத்தில் டில்லி, கொல்கத்தா அணிக்காக வாங்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டியில் இலங்கையின் வெற்றிக்கு ரணிலே காரணமாம்!



கொழும்பு, பெப்.22

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டித் தொடரை இலங்கை அணி கைப்பற்றியதற்கான மூல காரணம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி மூன்று போட்டிகளைக் கொண்ட இருபதுக்கு 20 போட்டித் தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டி, தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இன்று மூன்றாவதும் இறுதியுமான போட்டி அடிலெய்டில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இலங்கை கிரிக்கெட் அணி வெற்றியீட்டியமைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆஸ்திரேலியப் பிரதமர் அணிக்கும் இலங்கைப் பிரதமர் அணிக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற இருபதுக்கு 20 போட்டியின்போது இரு நாடுகளினதும் பிரதமர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாக பார்வையிட்ட போட்டியில் இலங்கை அணி வெற்றியீட்டியது அதிஷ்டமாகும்.

மஹிந்த ராஜபக்ஷ போட்டியை பார்வையிட்டிருந்தால் நிச்சயம் தோல்வி தான் கிடைத்திருக்கும்.

அண்மையில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டர்ன்புல்லும் நாணயச் சுழற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நாணய சுழற்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டினார்.

போட்டியிலும் இலங்கை அணி வெற்றியீட்டியது. அடுத்த போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றியீட்டியுள்ளது.

இவ்வாறுதான் தலைவர்கள் இருக்க வேண்டும். செல்லும் இடமெல்லாம் வெற்றி வாகை சூடி வரும் தலைவர்கள். நாடும் வெற்றியடையும் அதுவே அதிஷ்டம் .- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 4 கோடி ரூபாவுக்கு ஏலம்: சந்தோஷத்தில் ஆப்கான் வீரர்!

சென்னை, பெப்.22

ஐ.பி.எல். தொடரில் தன்னை 4 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்தமை மிகவும் ஆச்சரியமாகவும், சந்தோஷமாகவும் இருக்கின்றன என்று ஆப்கானிஸ்தான் வீரர் ரஷித் கூறியுள்ளார்.

இவ் ஆண்டின் ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் நேற்று நடைபெற்றது. இதில் யாரும் எதிர்பார்க்காத வகையில் ஆப்கானிஸ்தான் அணியைச் சேர்ந்த 18 வயதே ஆன சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கானை சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 4 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்தது.

மும்பை இந்தியன்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் அணிகளுக்கு இடையே ரஷித்தை ஏலம் எடுக்க கடும் போட்டி நிலவியது.

ஐ.பி.எல். ஏலத்தில் தான் 4 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டது குறித்து ரஷித் கான் தெரிவித்தவை வருமாறு:-


நான் ஏலத்தில் எடுக்கப்பட்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதேவேளையில் மிகவும் சந்தோஷசமாகவும் இருந்தது. இந்தச் சம்பவத்தை



நான் நம்பவே இல்லை. மிகவும் விரைவில் நடந்து விட்டது.

ஆப்கானிஸ்தான் வீரர்களுடைய நோக்கமே டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவதுதான். அதற்காக நாங்கள் கடினமாக முயற்சி செய்து விளையாடி வருகிறோம். டெஸ்ட் போட்டியில் விளையாடும் அனுமதியை பெற்றுவிட்டோம் என்றால், எங்களுடைய சந்தோஷத்தை விவரிக்க இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

# டிக்வெல்லவுக்கு விளையாடத் தடை; மாற்றுவழி கோரும் பிரதமர் ரணில்!




கொழும்பு, பெப்.22

இலங்கை அணியின் வீரர் நிரோஷன் டிக்வெல்லவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் ஆட்டங்கள் இரண்டில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி.யின் விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட காரணத்தால் இவருக்குப் போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு 20 போட்டியின் போது நடுவரின் தீர்ப்பினை அவமதித்த குற்றச்சாட்டு மற்றும் தென்னாபிரிக்காவுக்கெதிரான ஒருநாள் போட்டியின் போது ஐ.சி.சி. விதிமுறையை மீறியமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக இவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இன்றைய ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டியில் இவர் விளையாடமாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிரோஷன் டிக்வெல்லவுக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் சபையால் விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவிற்கு இது தொடர்பில் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலையீட்டினால் டிக்வெல்லவினது போட்டித் தடைக்கு மாற்றுவழிகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற ஆஸ்திரேலிய பிரதமர் பதினொருவர் அணி மற்றும் இலங்கை அணிக்கு இடையில் நடைபெற்ற இருபதுக்கு 20 போட்டியிலும் நிரோஷன் டிக்வெல்ல சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தப் போட்டியில், இடது கைத் துடுப்பாட்ட வீரர் டிக்வெல்ல 26 பந்துகளிற்கு ஒரு சிக்ஸர் மற்றும் 8 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியின் வெற்றிக்கு கை கொடுத்தார்.

நிரோஷன் திக்வெல்ல இலங்கை அணியில் தற்போதைய சிறந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரராகவும், ஐ.பி.எல் போட்டிகளின் கொல்கத்தா அணியிலும் இடம்பெற்றிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மஹேல, சங்கா, கெயில் பாகிஸ்தான் செல்ல மறுப்பு!



டுபாய், பெப்.22

முன்னணி வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன மற்றும் கிரிஸ் கெயில் ஆகியோர் பாகிஸ்தானுக்குச் செல்ல மறுப்புத்தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டிகள் டுபாயில் நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் பாக். சுப்பர் லீக்கின் இறுதிப் போட்டியை பாகிஸ்தானின் லாகூர் மைதானத்தில் நடத்துவதற்கு பாக். சுப்பர் லீக் நிர்வாகம் மற்றும் அணி உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாகிஸ்தான் செல்வதற்கு பல வீரர்கள் ஆதரவளித்துள்ள போதும், முன்னணி வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன மற்றும் கிரிஸ் கெயில் ஆகியோர் மறுப்புத் தெரிவித்துள்ளனர் என்று வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாகவே பாகிஸ்தான் செல்வதற்கு இவர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள், லாகூரில் நடக்கவிருந்த போட்டியில் பங்கேற்கச் சென்ற போது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனால், பாகிஸ்தானில் விளையாடுவதற்கு தேசிய கிரிக்கெட் அணிகள் அங்கு செல்ல மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் போட்டியில் சங்கக்காரவின் தலைமையிலான கராச்சி கிங்ஸ் அணி அதிக வெற்றிகளை பதிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அசேல குணரத்னவுக்கு கிடைத்த ஐ.பி.எல். அதிஷ்டம்!





கொழும்பு, பெப்.22

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்திவரும் அதிரடி ஆட்டக்காரரும் சகலதுறை வீரருமான அசேல குணரத்னவுக்கு இம்முறை ஐ.பி.எல்லில் அதிஷ்டம் கைகூடியுள்ளது.

இலங்கை அணி வீரரான அசேல குணரத்னவை 30 இலட்சம் இந்தியன் ரூபாவுக்கு மும்மை இந்தியன்ஸ் அணி ஏலத்தில் வாங்கியுள்ளது. இதன் இலங்கை பெறுமதி 6.72 மில்லியன் ரூபாவாகும்.

அசேல குணரத்ன ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இருபதுக்கு 20 போட்டியில் அதிரடியாக துடுப்பெடுத்தாடி இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார். மேலும், ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது போட்டியிலும் இலங்கை அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உசைன் போல்ட்டின் அதிரடி அறிவிப்பு!




லண்டன், பெப்.22

ஜமைக்காவின் குறுந்தூர ஓட்ட வீரரும், உலக சாதனைக்குச் சொந்தக்காரருமான உசைன் போல்ட் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை.- என அதிரடியாக அறிவித்துள்ளார்.

சர்வதேச ஊடக மொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் 9 தங்கப் பதக்கங்களை வென்று சாதனையை நிலை நாட்டியிருந்த உசைன் போல்ட் கடந்த ஜனவரி மாதம் இந்தச் சாதனையைத் தவறவிட்டார்.

2008 ஆம் ஆண்டு அஞ்சல் ஓட்டப் போட்டியில் அவரது சக வீரர் ஊக்கமருந்து உட்கொண்டமை உறுதி செய்யப்பட்டதால் போல்ட்டின் தங்கப்பதக்கம் திரும்பப் பெறப்பட்டதுடன், அவரது சாதனையும் பறிபோனது.

இந்தநிலையில், அடுத்த ஒலிம்பிக்கில் போல்ட் இந்தச் சாதனையை நிலைநாட்டுவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

இந்தநிலையில், உசைன் போல்ட் தான் அடுத்த ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளப் போவதில்லை என அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

## கீத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடூரமாகத் தாக்கிய குற்றச்சாட்டில் மேஜர் உட்பட ஐந்து இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில், 'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலையிலும் இந்தக் குழு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பது பற்றிய சாட்சியங்கள் கிட்டியிருக்கின்றன எனப் புலனாய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பாத ஓர் உயர் மட்டத்தைமேற்கோள்காட்டி, ஏ.எவ்.பி. செய்திச்சேவை இந்தப் 'பகீர்' தகவலை வெளியிட்டிருக்கின்றது.

கீத் நொயர் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவத்துடன் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தொடர்புகள் இருக்கின்றன என கல்கிஸை நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராணுவத் தலைமையை விமர்சித்த கீத் நொயர் 2008 மேயில் சித்திரவதை செய்யப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசையும், அவரது சகோதரரான பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் 'மிக்' விமானக் கொள்வனவு உட்பட ஆயுத சுவீகரிப்பு ஊழல்களையும் அம்பலப்படுத்த முயன்ற லஸந்த விக்கிரமதுங்க 2009 பெப்ரவரியில் குரூரமாகத் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

மேற்படி ஐந்து சந்தேக நபர்களும் இராணுவத்தின் மர்மக் கொலைத்தாக்குதல் குழுவாகச் செயற்பட்டுள்ளனர் என்றும் –

அக்குழுவின் தலைவரும், சூத்திரதாரியுமான நபர் விரைவில் சிக்குவார் என்றும் –

புலனாய்வுத் தரப்பினர் கோடி காட்டியுள்ளனர்.

கீத்நொயர் தாக்கப்பட்டமை, லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை, பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை போன்ற பல்வேறு கொடூரங்கள், ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் ஊடகவியலாளருக்கு எதிராக இழைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அவற்றில் சில பற்றிய மர்ம முடிச்சுக்களே இப்போது அவிழத் தொடங்கியிருக்கின்றன.

ஆனால் –

நிமலராஜன், சிவராம், நடேசன், சுகிர்தராஜன் உட்படப் பல ஊடகவியலாளர் கொல்லப்பட்டமை மற்றும் கடத்தித்தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் கிணற்றில் போட்ட கல்லாக எந்தவித நகர்வுமின்றி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை அறிவதற்காக அவர்களின் உறவுகள் கடந்த மாதம் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்த சமயத்தில் அவர்களைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சந்தித்திருந்தார்.

அவரின் கோரிக்கையை ஏற்றுப் போராட்டத்தை இடைநிறுத்திய அவர்கள் கொழும்புக்குச் சென்று அரசுத் தரப்பினருடன் கடந்த 9 ஆம் திகதி பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

அந்தப் பேச்சுக்களில் எந்த விதப் பயனும் கிட்டாத நிலையிலேயே மீண்டும் போராட்டத்தில் குதிப்பதற்கு அவர்கள் தீர்மானிந்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. (உ-100)

## இனியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாவின் இந்தத் தெளிவான நிலைப்பாட்டை அவர் இலங்கை அரசுத்தலைவர்களுக்குத் தெரியப்படுத்தினார் என நம்பிக்கையாக அறியவந்தது.

முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசியிருந்தார். இனப்பிரச் சினைத் தீர்வையும் உள்ளடக் கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முடங்கிப் போய் இருக்கின்றமை தொடர்பில் அரசுத்தரப்புக்கு அழுத்தம் பிரயோகிக்கும்படி கூட்டமைப்பு அவரிடம் கோரியமையையும் –

அதை அவர் ஏற்றுக்கொண்டிருந்தமையும் – பற்றிய செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன என்பது தெரிந்ததே.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை இனியும் கால தாமதப்படுத்தாமல் முடிக்கும்படி இந்தியா, கொழும்பை வற்புறுத்துகின்றது என்ற செய்தியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுத் தமக்கு நெருக்கமானவர்களுடன் பகிர்ந்து கொண்டார் என அறிய வந்தது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது என அவைத் தலைவர் சி.வி,கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 85 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

அதன்போது மாகாண நீர்ப் பிரச்சினை தொடர்பான சிறப்பு அமர்வைப் பிற்போட வேண்டுமென முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கோரியுள்ளார் என அவைத் தலைவர் சபையில் அறிவித்தார்.

மாகாண நீர்ப்பிரச்சினை தொடர்பாக சிறப்பு அமர்வொன்று நடத்தப்பட வேண்டும் என கடந்த சபைக் கூட்டத்தின் போது கடும் வாக்குவாதங்களுக்கு மத்தியில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் அந்த அமர்வு நடைபெறும் என உறுப்பினர்கள் எதிர்பார்த்த நிலையில், அதை நடத்த வேண்டாம் என முதல்வர் கோரினார் என அவைத் தலைவர் அறிவித்தமையால் பெரும் அமளி துமளி இடம்பெற்றது.

அமர்வைப் பிற்போட முடியாதென ஒரு தரப்பினரும் இதற்குக் காரணங்கள் இருக்கின்றன இன்னொரு தரப்பினரும் தெரிவித்ததால் வாக்குவாதம் முற்றியது.

ஆனாலும், முதலமைச்சர் சுகவீனமுற்றிருப்பதாலும் விவசாய அமைச்சர் வெளிநாடு சென்றிருப்பதாலும் இந்த அமர்வை பிற்போடுவதாகவும் சபை உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைய இந்த அமர்வு எதிர்வரும் 7 ஆம் திகதி, சிறப்பு அமர்வாக நடத்தப்படும் எனவும் அவைத் தலைவர் அறிவித்தார். (ம)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் பல்வேறு மாகாண சபைகளின் முதலமைச்சர்களும் வழிகாட்டல் குழுவுக்குச் சமர்ப்பித்த யோசனைகளைஓர் அறிக்கையாகத் தரும்படி முன்னைய கூட்டத்தில், கூட்டத்தின் தலைவர் என்ற முறையில் பிரதமர் பணித்திருந்தார். அந்த அறிக்கை, கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விரிவாக ஆராயப்பட்டது. மாகாணங்களுக்கு, அதிக அதிகாரங்கள் வழங்குவதற்கு கூட்டத்தில் பலரும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வழிகாட்டல்குழுவின் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதிக்கு, ஒத்திவைக்கப்பட்டது. (உ)

## கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியிருப்பதானது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற பச்சைத் துரோகமாகும். அவ்வாறான நிலைப்பாடுகளையுடைய தரப்புக்களைப் புறக்கணித்து, தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையே தேவை என்பதை 'எழுக தமிழ்' ஊடாக வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஆகவே, அதேபோன்று வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் அமைப்புக்களும் கடந்த முறை நிறைவேற்றப்பட்ட ஐ.நா தீர்மானத்தை நிராகரித்தும் கால நீடிப்பை வழங்கக் கூடாதெனச் சுட்டிக்காட்டியும் சர்வதேச விசாரணை தேவை என்பதையும் வலியுறுத்தியும் செயற்பட வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் – கந்தர் மடத்திலுள்ள தமது அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தாம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அச் சந்திப்பில் இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

மார்ச்சில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட இருக்கிறார். இலங்கை தொடர்பாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அக்கறை செலுத்தி வருகின்றது. அந்த விடயங்களில் விசேடமாக 2015 நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாகவும் அது சம்பந்தமாக இலங்கை அரசு எடுத்த நடவடிக்கை தொடர்பாகவும் மீண்டுமொருமுறை ஆராயப்பட விருக்கின்றது.

இந்த நிலையில்தான் இலங்கை அரசு மேலதிக கால அவகாசம் கோரவிருப்பதாக அறிவித்திருக்கிறது. உண்மையில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இங்கிருக்கும் அரசியல் நிலைமைகளை கையாளுவதற்காக மட்டும் தான் நிறைவேற்றப்பட்டனவே தவிர பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்துவதற்காக நிறைவேற்றப்படவில்லை என்பதை நாங்கள் ஆரம்பத்திலிருந்தே கூறி வந்திருக்கின்றோம்.

அது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ இருந்தகாலத்தில் அந்த ஆட்சிக்கு நெருக்கடிகளைக் கொடுத்து ஆட்சி மாற்றத்தை கொண்டு வருவதற்காகவே தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டனவே தவிர பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்புக் கூறலை வழங்க வேண்டுமென்ற உறுதியான நிலைப்பாடோடு கொண்டுவரப்படவில்லை என்பதும் எங்களது விமர்சனமாக இருந்தது. இதனாலேயே மனித உரிமைகள் பேரவையில் பாதிக்கப்பட்ட மக்களின் ஒத்துழைப்போடு அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில்தான் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் கொண்டு வரப்பட வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன.

அந்த அடிப்படையில்தான் இந்த நாடுகள் கொண்டு வருகின்ற தீர்மானங்கள் அவை வெறுமனே ஆட்சி மாற்றத்துடன் மட்டும் மையப்படுத்துவனவாக உள்ளன என்றும் கூறியிருந்தோம்.

ஆகையால் அவற்றை நிராகரித்து எப்படிப்பட்ட தீர்மானங்கள் எங்களுக்குத் தேவை என்பதை நாங்கள் ஆணித்தரமாகக் கூறவேண்டும். வேறு எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று ஆரம்பத்திலிருந்தே கூறி வந்தோம். அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் ஆட்சி மாறியிருந்தாலும் புதிய ஆட்சியையும் கட்டுப்படுத்தக் கூடியதாயிருக்கும் என்ற விடயத்தை அன்றைக்கே நாங்கள் கூறிவந்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை.

நிபந்தனையற்ற ஆதரவைக் கொடுத்து, ஒவ்வொரு தீர்மானத்தையும் வேறு வல்லரசுகள் தங்களுடைய தேவைகளுக்காக, வெறுமனே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மட்டுமே கூட்டமைப்பினர் வழங்கினர். அதனால் இன்றைக்கு ஆட்சி மாறிய பின்னர் அரசே விரும்பியபடி உள்ளக விசாரணைதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது கலப்பு பொறிமுறை அல்ல. இது உள்ளகப் பொறி முறைதான். இதன் முழுப் பொறுப்பும் இலங்கை அரசுக்குத்தான். அவ்வாறு அரசுக்கு முழுப் பொறுப்பையும் கொடுத்து விட்டு இலங்கை அரசுக்கு சொல்லப்பட்டிருந்தது – என்னவெனில் இயலுமென்றால் சர்வதேசப் பங்களிப்பைப் பெறலாம் என்றுதான்.

ஆனால், இன்றைக்கு இலங்கை அரசைப் பொறுத்த வரையில் அது தான் சர்வதேசப் பங்களிப்பை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் சர்வதேசப் பங்களிப்பை வெறுமனே கண்காணிப்புக்கும் ஆலோசனை எடுப்பதற்கும் தயாராக இருப்பதாகவும் அதே நேரம் அந்தப் பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பைப் பெறப் போவதில்லை என்றும் தெளிவாகக் கூறியிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் வரப்போகும் மார்ச் மாதம் இலங்கை தொடர்பாக ஆராயப்பட இருக்கின்றது.

கடந்த தீர்மானத்தின் பிரகாரம் அரசு சர்வதேச பங்களிப்பை மறுத்திருக்கின்ற நிலையில், மீண்டும் அரசுக்கு காலத்தைக் கொடுக்கப் போகின்றோமா என்பதே இன்றைக்கு இருக்கும் கேள்வியாகும். எங்களைப் பொறுத்தவரையில் இது இரண்டாவது முறையாக இலங்கை அரசாங்கம் காலத்தை நீடிக்கின்றது என்று கூறலாம். அதாவது புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து முதல் ஒரு தடவையும் இது இரண்டாவது முறையாகவும் கால நீடிப்பைக் கேட்கிறது.

தீர்மானத்தில் ஏற்கனவே இருக்கின்றவற்றை அரசு மறுதலித்து சர்வதேசப் பங்களிப்பை நிராகரித்திருக்கின்ற நிலையில் இத்தீர்மானத்துக்கு கால அவகாசத்தை வழங்கப் போகின்றோம் என்றால் மீண்டும் மீண்டும் வெறுமனே வெளிநாடுகளுடைய நிகழ்ச்சி நிரல்களுக்கும் அவர்களின் நலன்களைப் பேணுவதற்காகவும் மட்டுமே நான் எங்களுடைய நிலைப்பாடுகளை வலியுறுத்துவதாக அமையும்.

இதனை எமது மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ்ச் சட்டத்தரணிகள் சங்கம் ஆணித்தரமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. எந்தவொரு கட்டத்திலும் பாதிக்கப்பட்ட மக்கள் கோணத்தில் இருந்து ஒருகாலநீடிப்பை வழங்கக் கூடாதென்று வலியுறுத்தியிருக்கின்றது. அது மட்டுமல்ல மிகத் தெளிவாக இலங்கை அரசு தொடர்பான விடயங்கள் சர்வதேச விசாரணை நோக்கி கொண்டு செல்ல வேண்டும், இனிமேலும் இருக்கின்ற தீர்மானத்தை வைத்துக் கொண்டு எதனையும்செய்யமுடியாதென்று வலியுறுத்தியிருகிறார்கள். அதனை நாங்கள் முழுமையாக வரவேற்கின்றோம்.

ஆகையால், எங்களைப் பொறுத்தவரையில் இத்தீர்மானத்தைத் தொடர்ந்தும் வைத்திருப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறோம். கால அவகாசம் தொடர்ந்தும் கொடுப்பதென்றால் அது பச்சைத் துரோகமாகவே இருக்கப் போகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் கடந்த வாரம் ஜெனீவாவுக்குச் சென்று பல நாடுகளைச் சந்தித்து கால நீடிப்பை வழங்க இணங்கியிருக்கிறார். அவ்வாறு தான் கூட்டமைப்பின் தலைமையும் இந்த கால நீடிப்புக்கும் இணங்கியிருக்கிறது. இது தான் யதார்த்தம்.

மிக மோசமான தீர்மானத்தின் அடிப்படையில் நிபந்தனையற்ற ஆதரவைக் கூட்டமைப்பு அரசுக்கு வழங்கி இருக்கிறது. ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சர்வதேச பங்களிப்பை முற்று முழுதாக உதாசீனம் செய்திருக்கும் நிலையில் அவர்களுக்கான மீண்டுமொரு சந்தர்ப்பத்துக்கான உரிமையைக் கூட்டமைப்பே எடுத்துக் கொடுத்திருக்கிறது. அவ்வாறு அந்த உரிமையை எடுத்துக் கொடுத்திருக்கின்ற போதும் சர்வதேசப் பங்களிப்பை அரசு நிராகரித்திருக்கின்ற நிலையிலும் கூட நாங்கள் கால அவகாசத்தைக் கொடுக்கப் போகின்றோம் என்று கூட்டமைப்பு கூறி வருகின்றது. இது நிச்சயமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களில் எடுக்கப்படும் முடிவல்ல. இந்த அரசாங்கத்தை காப்பாற்றும் வகையில் எடுக்கப்படும் முடிவென்பதை மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் வடகிழக்கு சிவில் அமைப்புக்கள் அரசிற்கு காலநீடிப்பு இனிமேலும் கொடுக்கக்கூடாதென்ற முடிவை எடுக்க வேண்டும், அவ்வாறு எடுப்பது மட்டுமல்லமுழுமையான சர்வதேச விசாரணையை நோக்கித்தான் தீர்மானம் வரவேண்டுமென அவர்கள் வலியுறுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

யதார்த்தம் என்னவெனில் தமக்கு என்ன தேவை என்பதை எழுக தமிழினூடாக மக்கள் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, சிவில் சமூகங்களும் அதனைச் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு மக்களுடைய பிரதிநிதிகள் என்ற பெயரில் செய்கின்ற மோசடிகளை அம்பலப்படுத்தி தமிழ் மக்கள் மிகத் தெளிவாக இருக்கின்றார்கள் என்பதை வெளிக்காட்டியே ஆகவேண்டும். இல்லாவிடின் மீண்டும் மீண்டும் எம் மக்களுக்கு துரோகம் அளிப்பதாகத்தான் இருக்கும்.

அவகாசம் கொடுப்பது என்பது தாம் விரும்பிய அரசுக்கு எந்த வித நெருக்கடியையும் கொடுக்காது, ஆட்சி மாறினால் அப்போது நெருக்கடியைக் கொடுக்கும் வகையில் மட்டும்தான் இத் தீர்மானத்தை முன்வைத்திருக்கின்றனரே தவிர, பொறுப்புக் கூறல் என்ற கோணத்தில் இத்தீர்மானத்தில் எதுவுமே இல்லை.

இந்தத் தீர்மானத்தை நிராகரித்து, காலநீடிப்பை வழங்காது முழுமையான சர்வதேச விசாரணையைத்தான் நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்ற விடயத்தை வடகிழக்கு சார்ந்த சிவில் சமூக அமைப்புக்கள் பகிரங்கமாக முன்வைத்து அவர்கள் செயற்பட வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து வற்புறுத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியும் பங்குபற்றினார் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, லங்கா சோசலிஸக்கட்சி ஆகியவற்றின் சார்பிலேயே இன்று பிரதமருடன் சந்திப்பு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், டக்ளஸ் தேவானந்தா, எம்.ஏ.சுமந்திரன், சிறிதுங்க ஜெயசூரிய ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர். (உ)

# காணாமற்போனோர் விசாரணை முடிவுகளை இரு வாரங்களில் உறவுகளுக்கு அறிவிப்போம்

## வடமாகாண பணிப்பாளர் சாந்தன் தகவல்

இலங்கை மனித உரிமைகள் அமைப்பால் மேற்கொள்ளப்பட்டு வரும் காணாமற் போனோர் தொடர்பான விசாரணை முடிவுகள் இரு வாரங்களுக்குள் உறவினர்களுக்கு அறிவிக்கப்படும் என்று இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாண பணிப்பாளர் பேராசிரியர் ஆர். சாந்தன் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கான முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் செயலமர்வு இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மீசாலை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் நடத்தப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த களுபோவில தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் 50 பேர் தங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இதனையடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் காணாமல் போனவர்கள் தொடர்பான விவரங்களை கேட்டறிந்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறோம்.

அந்த வகையில், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காணாமற் போனவர்கள் தொடர்பான அமர்வு கொடிகாமத்தில் நடைபெற்றது.

எமது அமைப்பின் மகளிர் விவகார பொறுப்பாளரால் அனைத்து பிரதேச செயலகங்களிலும் விண்ணப்பம் கோரப்பட்டு பின்னர் அவை பரிசீலிக்கப்பட்டு அந்த விவரங்கள் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படும்.

அங்கிருந்து அறிவிக்கப்படும் பகுதிகளில் அமர்வை நடத்துவோம். தென்மராட்சியில் 50 பேருடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளோம்.

இந்தப் பதிவுகளின் தொகுப்புகள் ஜனாதிபதி செயலகத்ததுக்கு கையளிக்கப்படும். அங்கிருந்து காங்கேசன்துறையில் உள்ள சிரேஷ்ட பொலிஸ்மா அதிபக்கு இவர்கள் தொடர்பான அறிக்கை அனுப்பிவைக்கப்படும். அவர்கள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணை முடிவுகள் இரு வாரங்களுக்குள் உறவினர்களுக்கு அறிவிக்கப்படும்.

அனைத்து மக்களுக்கும் இவ்வாறு விரைவாக முடிவுகளை அறிவிக்க முடியாவிட்டாலும் இயன்றளவு முடிவுகளை அறிவிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டு இருக்கிறோம்.

இங்கு இடம்பெற்று வரும் கொலை, களவு தொடர்பாகவும் உரியவர்களுடன்தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்துள்ளோம். இது பயனுடைய விடயமாகத் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது. -என்றார். (ஐ)

### சாரணியத்தில் 'கமலபார்' விருது



சாரணியத்தில் பல்வேறு சாதனைகளைப் படைத்த கலாநிதி மா.புவனேந்திரனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் அதிஉயர்விருதான 'வெள்ளி கமலபார்' விருது வழங்கப் படுகின்றது.

இன்று புதன்கிழமை பி.ப2.30மணிக்கு கொழும்பு தாமரைத் தடாகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் அவருக்கு இந்த விருது வழங்கப்பட இருக்கின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து இவர் மட்டுமே இந்த விருதுக்குத் தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நீதிமன்றச் சேவையின் சுயாதீனத்தில் கேள்விக்குள்ளாக்கியுள்ள ஜனாதிபதி

### மன்னிப்புக் கோர வேண்டும் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, பெப்.22

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்ற சேவைகளில் தலையீடு செய்துள்ளார். இதனால் நீதிமன்ற சேவையின் சுயாதீன தன்மையை அவர் கேள்விக்குறியாகியுள்ளார். இதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களிடத்தில் மன்னிப்பு கோர வேண்டும்.

அவ்வாறு இல்லாவிடின் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர நேரிடும் என்று பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைப்பின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கம்பன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டக்களப்பில் சேவையாற்றி வந்த இராமநாதன் கண்ணன் என்ற சட்டத்தரணியை ஜனவரி 31 ஆம் திகதியன்று மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமித்து முழு சட்டத்துறையையும் தளம்பலடையச் செய்துள்ளார்.

இராமநாதன் கண்ணன் என்பவர் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில்மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான தேர்வுகளில் சித்தியடையவில்லை. அந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தற்போதும் நீதிவான்களாக சேவையாற்றுகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால செய்த தவறை ஏற்றுக் கொண்டு இனி இந்த தவறை செய்யப் போவதில்லை என்று நாட்டு மக்களிடத்தில் மன்னிப்புக் கோர வேண்டும். -- என்றார். (ஐ)

# புளியம்பொக்கணை பொங்கலில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

## பனையோலைப் பெட்டிகள் பயன்படுத்தத் தீர்மானம்

கிளிநொச்சி, பெப்.22

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் விழா ஏப்ரல் மாத் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அங்கு பொலித்தீன் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் இவ்வாண்டுக்கான வருடாந்த பொங்கலை முன்னிட்டு உற்சவ முன்னாயத்த ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பொங்கல் விழாவுக்கான ஏற்பாட்டு கூட்டத்தில் பண்டமெடுத்தல், சுகாதாரம், போக்குவரத்து, வீதி அபிவிருத்தி, குடிதண்ணீர், பாதுகாப்பு, சிரமதானம், கடைவாடகை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இதன்போது ஆலய உற்சவ காலங்களில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்படும் என்றும் மாற்றீடாக காகித பைகள் மற்றும் பனையோலைப்பெட்டிகளை பயன்படுத்த வேண்டும் என்றும்தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாணசபை உறுப்பினர் பி.அரியரட்ணம், கண்டாவளைபிரதேசசெயலாளர் த.முகுந்தன், உதவி மாவட்ட செயலாளர் த.பிருந்தாகரன், உள்ளூராட்சி ஆணையாளர், கரைச்சி பிரதேசசபை செயலாளர், மாவட்ட பொலிஸ் உதவி அத்தியட்சகர் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பலதிணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-70)

### வண்ணை சாந்தையர்மடம்

## 62 ஆவது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 62 ஆவது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

திருமுறைச் செல்வன் சி.கிருஷ்ணமூர்த்தியின் திருமுறை ஓதலுடன் ஆரம்பமாகும் விழாவில் அகில இலங்கை திருமுறைமன்ற மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை ஆலயபிரதமகுரு பிரம்ம ஸ்ரீ ர.கேசவக் குருக்களும் வாழ்த்துரையை ஆலய தர்ம பரிபாலன சபைத் தலைவர் சுப்பிரமணியமும் நிகழ்த்துவர். 2016 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (இ-ச)

## சமூக அபிவிருத்திக்கான விருது கல்வி அமைச்சருக்கு!

கொழும்பு, பெப்.22

சர்வதேச கூட்டு சமூக பொறுப்புக்கான மாநாட்டில் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சமூக அபிவிருத்திக்காக மேற்கொண்ட பங்களிப்புக்காக சமூக அபிவிருத்தியில் சிறந்த பங்களிப்பாளர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சமூக அபிவிருத்திக்காக அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் வழங்கிவரும் மூலோபாயத்துக்கான தலைமைத்துவம் மற்றும் பங்களிப்பு முழு உலகத்துக்கும் எடுத்துக் காட்டாகும்.

விசேடமாக கிராம மட்டத்திலிருந்து சமூக மாற்றத்துக்காக அமைச்சர் எடுத்துக் காட்டு தலைவராக செயற்படுகிறார் என்றும் அதனைப் பாராட்டுகிறோம் என்றும் இந்த அமைப்பு மாநாட்டின் ஸ்தாபகர் கலாநிதி ஆர். எல். ஹார்த்தியா தெரிவித்தார்.

இந்தியாவின் மும்பாயில் த. தாஜ் லாண்ட் என்ட் விடுதியில் இந்த மாநாடு நடைபெற்றது.

ஆசிய மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 130 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். (ஐ)



காலைக்கதிர்
Kalaikkathir



## புதுக்குடியிருப்பு மக்களுக்குத் தீர்வு இல்லை

# நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டார் சிவமோகன்





புதுக்குடியிருப்பில்பொதுமக்களின்காணிகளில்உள்ளபடையினரை வெளியேறக் கோரி அங்குள்ள பிரதேச செயலகம் முன்பாகமக்கள்ஆரம்பித்தகவனவீர்ப்பு போராட்டமும் உணவு தவிர்ப்புப் போராட்டமும் நேற்றும் தொடர்ந்தது.

இவர்களின்போராட்டம்நேற்றுடன் 22 ஆவது நாளாகவும் நடைபெற்றபோதிலும் தீர்வுகள் எவையும் எட்டப்படவில்லை. இதனால், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நேற்று நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளச் செல்லாமல் மக்களோடு இருந்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர்பிரிவிற்குட்பட்ட 49 குடும்பங்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த 3 ஆம் திகதி மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களைக் கடந்த 9 ஆம் திகதி கொழும்புக்கு அழைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் கலந்துரையாடினார். ஆனாலும் எதுவித தீர்வும் முன்வைக்கப்படவில்லை. இதனால் அவர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில்ஈடுபட்டுவருகின்றனர்என்பது குறிப்பிடத்தக்கது. (ம-81)

## இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கக் கோரி

# காணாமற்போனோரின் உறவினர்கள் ஐ.நா. பொதுச் செயலாளருக்கு மகஜர்



கிளிநொச்சி, பெப்.22

காணாமற்போனோர் தொடர்பாக உண்மைத் தன்மையை இலங்கை அரசு வெளிப்படுத்த ஐ.நா.அழுத்தம்கொடுக்கவேண்டும் என ஐ.நா. செயலாளருக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்கள் கிளிநொச்சியில் நேற்று இரண்டாவதுநாளாகவும்போராட்டத் தில் ஈடுபட்ட நிலையில் அந்த மக்களே ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியா கட்ரஸீற்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் உடனடி நடவடிக்கையை வலியுறுத்தி காணாற்போனோரின்உறவுகள் கிளிநொச்சி, கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இனியும் காலம் தாமதிக்க வேண்டாம்' என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைஅரசுக்குப் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. கால அவகாசம் வழங்கும் விடயத்திற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும்இணங்கிப்போகஇருப்பதாகத் தகவல்கள் வெளிவருகின்றன. இந்தவிடயத்தில்தமிழ்த்தேசியக் கூட்டமைப்புஎங்களின்உணர்வுகளுக்குப் புறம்பாகச் செயற்படக் கூடாது என்றும் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணாமல் ஆக்கப்பட்டவர்கள், காணி, அரசியல் கைதிகள் விடயங்களை முதன்மைப்படுத்தியே தமிழ் மக்களின் வாக்குகளை கோரியிருந்தனர். மக்களும் அதற்கான ஆணையை வழங்கியிருந்தார்கள்.

ஆனால், தற்போது தங்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் அதற்கு மாறாகச் செயற்படுகின்றனர்என்றும் அம்மக்கள் குற்றம்சாட்டினர். தங்களுக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தில் தாங்கள் ஈடுபடுவர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.


இதேவேளை, தமது நியாமான கோரிக்கைகளை இலங்கை அரசு தீர்த்துவைப்பதற்குஐ.நா. அழுத்தம்கொடுக்க வேண்டும் எனக்கோரி அவர்கள் ஐ.நா. செயலாளருக்கு நேற்று மகஜர் ஒன்றை அனுப்பினர்.

ஐ.நா.செயலாளருக்கான மகஜர்கிளிநொச்சி, 155ஆம்கட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்ட அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது. (ம-70)

## வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட எந்த நிதியும் திரும்பிச் செல்லவில்லை

### அவைத் தலைவர் சி.வி.கே. அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)



வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டநிதியைமத்தியஅரசு உரியவாறு விடுவிக்க வில்லை. இதனால் பல வேலை கள் நிறைவடையாமல் இருக்கின்றன. இந்த நிலையில், வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்கின்றது எனக் கூறப்படுவதுஅப்பட்டமானபொய் என அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 85 ஆவது அமர்வு நேற்று மாகாண சபைப்பேரவைச்செயலகத்தில் இடம்பெற்றது.

அதன்போது, மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிதிரும்பி செல்கின்றது எனக் குற்றச்சாட்டுக்கள் வெளியாகின்ற நிலையில், அதன் உண்மைத்தன்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என மாகாணசபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் மற்றும் தியாகராஜா ஆகியோர் கோரிக்கை விடுத்தனர்.

அதற்குப் பதிலளிக்கும் போதே அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட எந்த நிதியும் திரும்பிச் செல்லவில்லை. நிதிப் பற்றாக் குறையால் நாம் வேலைகளைச் செய்து முடிக்காமல் இருக்கின்றோம். எங்களை விமர்சிப்பவர்களுக்கு இது புரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் –

'என்னுடைய அமைச்சில் இருந்து எந்த நிதியும் திரும்பிச் செல்லவில்லை. எந்த அமைச்சிலிருந்து எவ்வளவு தொகை திருப்பி அனுப்பப்பட்டது என்பது தொடர்பிலும் தெரிவிக்க வேண்டும்.' – என்றார். (ம)

## மனித உரிமைப் பேரவைக்கு

# இலங்கை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனக் கண்டனம்

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன், பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தபோதும், அது நிறைவேற்றப்படவில்லை என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதிலும், காவலில் உள்ளவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இலங்கை அரசாங்கம்தோல்வியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், பாதுகாப்புத் துறையில் மாற்றம் செய்வதாக அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதனையும், நிலைமாறு கால நீதிப்பொறிமுறைமை உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் முனைப்புக் குறித்தும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென, மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலயப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு வாக்குறுதி அளித்து 18 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இலங்கைத் தலைவர்கள் முக்கிய மனித உரிமை விடயங்களுக்குத் தீர்வு காண முனைப்புக் காட்டவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சி கூட்டமைப்பு அலுவலகத்தில் கைது; மன்னிப்புக் கோரினர் பயங்கரவாதப் பொலிஸார்

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகமான அறிவகத்தில் வெடிகுண்டு மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்து இருவரைக் கைது செய்து 13 மாதக் கால விளக்கமறியலில் வைத்திருந்தமை தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் மன்னிப்புக் கோரினர்.

இவ்விடயத்தை ஒட்டி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மீதான தீர்ப்பை நேற்று மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயம் நேற்று வழங்கியது. அப்போதே மேற்படி மன்னிப்புக் கோரல் பதிவு செய்யப்பட்டது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகமான அறிவகத்தில் வெடிகுண்டு மற்றும் வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்டு 13 மாதங்களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அருணாசலம் வேழமாலிகிதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அப்போதைய பிரத்தியேகச் செயலாளராக இருந்த பொன்னம்பலம் லக்ஷ்மிகாந்தன் ஆகியோர் தொடர்பான வழக்கு விசாரணைகளின் இறுதித் தீர்ப்பே கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

13 மாதங்களாகச் சிறை வைக்கப்பட்டிருந்த இவர்கள் இருவர் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குத் தகுந்த ஆதாரங்கள், காரணங்கள் காணப்படாதமையால் இருவரும் 09.01.2014 அன்று நீதிமன்றத்தின் மூலம் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களின் கைதை ஆட்சேபித்துத்தாக்கல்செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கின் தீர்ப்பே நேற்று வழங்கப்பட்டது. அச்சமயமே மூன்றுநீதியரசர்கள் முன்னிலையில் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மன்னிப்பு கோரினர்.

நேற்றைய வழக்குத் தவணையின் போது அ.வேழமாலிகிதன் சார்பாக சட்டத்தரணியும் நாடாளுமன்றஉறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

## குற்றத் தீர்ப்பு

சனல்- 4 தொலைக்காட்சியின், 'இலங்கையின் கொலைக்களம்' விவரணப்படத்தை மலேசியாவில் திரையிட்ட அந்நாட்டு மனித உரிமை ஆர்வலர் லீனா ஹென்றி குற்றவாளி என மலேசிய நீதவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

எனினும் அவருக்கு எந்தத் தண்டனையும் அளிக்கப்படவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.